விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 மார்கழி 7 ரபி-அவ் 6 இதழ் 312

யாழ்ப்பாணம் புதன்கிழமை 22—12—82

## எட்டுக்கைதிகள் முயற்சி முறியடிக்கப்பட்டது

### சிறைக்காவலாளிகள் இருவர் உடந்தையாக இருந்தனர்?

(கொழும்பு)

போகம்பறைச் சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓட சில கைதிகள் எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

கைதிகள் தப்பியோட எடுத்த முயற்சிக்கு 2 சிறைச்சாலைக் காவலாளிகள் உடந்தையாக இருந்தார்கள் என்பது தெரிய வந்ததைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் இடை நிறுத்தம் செய்யப்பட்டு பொலிசாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

8 கைதிகள் சிறைச்சாலையிலிருந்து தப்பிஓட எடுத்த முயற்சி சிறைச்சாலை ஊழியர்களால் முறியடிக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை இவர்கள் தப்பி ஓட முயற்சித்தபோது சிறைச்சாலை மேலதிகாரிகளுக்கு உடன் அறிவிக்கப்பட்டு அம்முயற்சி முறியடிக்கப்பட்டது. சிறைச்சாலை ஊழியர்களை சிறைச்சாலை ஆணையாளர் திரு. ஜே. பி. டெல்கொட பாராட்டினார். [க]

## பாராளுமன்றம் வெள்ளி கூடுகிறது

(கொழும்பு)

பாராளுமன்றம் வெள்ளிக்கிழமை காலை பத்துமணிக்கு கூடுகிறது.

# மக்கள் தீர்ப்பு: மாவட்டரீதியில் முடிவுகள் அறிவிக்கப்படும்

## பஸ் சலுகை கட்டணம் நள்ளிரவுவரை அமுல்!

(கொழும்பு)

**இன்று நடைபெறும் பொதுசன வாக்கெடுப்பு முடிவுகள், மாவட்ட ரீதியாக இன்று நள்ளிரவுக்குப் பின்னர் தேர்தல் ஆணையாளரினால் உடனுக்குடன் அறிவிக்கப்படும்.**

இன்று காலை ஏழுமணிக்கு நாட்டிலுள்ள 6 985 வாக்களிப்பு நிலையங்களில், வாக்களிப்பு ஆரம்பமாகி மாலை 4 மணிக்கு முடிவடையும்.

உடனடியாக வாக்குப்பெட்டிகள் அந்தந்த மாவட்ட கச்சேரிகளுக்கு பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டு இன்றிரவு 9 மணியளவில், வாக்குகள் எண்ணப்படும்.

238 இடங்களில் வாக்குகள் எண்ணப்படும் இவற்றில் 72 இடங்களில் தபால் வாக்குகள் எண்ணப்படும். எண்ணுவது இன்று மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

இன்று நாடு முழுவதும் 81 லட்சத்திற்கு மேலான பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

வாக்களிப்பு நிலையங்களில் 60,000 உத்தியோகத்தர்கள் கடமையாற்றுவார்கள். அம்பாறை, திருகோணமலைமாவட்டங்களுக்கு உத்தியோகத்தர்கள் ஹெலிக்கொப்டர் மூலம் செல்வார்கள்.

மத்திய போக்குவரத்துசபை இன்று குறுகிய தூரங்களுக்கு மேலதிக பஸ் சேவை ஒழுங்கு செய்துள்ளது.

நீண்டதூர பஸ் சேவை குறைக்கப்பட்டுள்ளது. வாக்காளர்கள் பஸ்சில்செல்வதற்கு அளிக்கப்பட்டுள்ள அரை சட்டண சேவை, நேற்றுநள்ளிரவு முதல், இன்று நள்ளிரவு வரை அமுலுக்கு வந்துள்ளது.

சகல வங்கிகளும் இன்று காலை 9 மணி முதல் 10 மணி வரையே திறக்கப்பட்டிருக்கும்.

வாக்களிப்பதற்கு வசதியாக சகல ஊழியருக்கும் லீவு வழங்குமாறு தொழில் திணைக்களம், வேலைகொள்வோரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளது.

வாக்காளருக்கு வசதியாக, தேர்தல் உத்தியோகத்தர்கள் சகல விளக்கங்களையும் அளிப்பார்கள்.

நாளை வியாழக்கிழமை நண்பகலுக்குமுன்னர் சகல மாவட்டங்களின் முடிவுகளும் தெரிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தலையொட்டி சகல பகுதிகளிலும் பலத்த இராணுவ – பொலிஸ் கூட்டுப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சகல இடங்களுக்கும், பாதுகாப்புப்படையினர் கடமைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். [க]

### அவசரகாலச்சட்டம் நீடிப்பு

[கொழும்பு]

அவசரகாலச்சட்டம்மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

அவசரகாலச்சட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் முடிவடைவதாக இருந்தது இச்சட்டத்தை நீடிக்கும் உத்தரவு பத்தொன்பதாம் திகதி பிரகடனப்படுத்தப்படாததால் அவசரகாலநிலை காலாவதியானதாகக் கருதப்பட்டது.

சர்வஜன வாக்கெடுப்புக்குப் பின்னர் சில சக்திகள் வன்செயலுக்குத் தூபமிடக்கூடும் என்று படைத் தளபதிகள் வலியுறுத்தியதைத் தொடர்ந்து அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிப்பதென்றுநேற்று முன்தினம் திங்கட்கிழமை முடிவுசெய்யப்பட்டுள்ளது!

## வாக்காளர்களுக்கு இன்று அரைக்கட்டணம்!

(யாழ்ப்பாணம்)

வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு வ போக பஸ்களில் அன்று அரைக் கட்டணத்தில் பயணம் செய்யலாம்.

வாக்காளர், தங்கள்வீடுகளிலிருந்து வாக்களிப்பு நிலையத்திற்கு பஸ்களில் செல்லும் போதும், வாக்களிப்பு நிலையத்திலிருந்து திரும்பி பஸ்களில் வீடு திரும்பும்போதும் அரைக் கட்டணமே வசூலிக்கப்படும். (க

## கொள்ளையர்கள் ஐவரும் கூட்டுத்தாபன காவலாளிகள்!

(மன்னார்)

முள்ளிக்குளத்திலிருந்து மன்னாருக்குச் சென்ற மினிபஸ்ஸை நேற்று முன்தினம் கொண்டச்சி என்னுமிடத்தில் துப்பாக்கிமுனையில் மறித்து பிரயாணிகளிடமிருந்து நகைகளையும், பணத்தையும் கொள்ளையடித்த முகமூடிக் கொள்ளையரில் பிரயாணிகளால் மடக்கிப்பிடிக்கப்பட்ட கொள்ளையர் இருவரும் ஏனைய கொள்ளையர் மூவரும் அரச மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தில் காவலாளிகளாக்கடமையாற்றுபவர்கள் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

தலைமறைவான 3 கொள்ளையர்களையும் பொலிசாரிடம் ஒப்படைப்பதாக முந்திரிகைக் கூட்டுத்தாபனமுகாமையாளர் உறுதியளித்துள்ளார்.

கொள்ளையின் போது பிரயாணிகளால் மடக்கிப்பிடிக்கப்பட்டவர்கள் அரச மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் காவலாளிகளானஎப்ச திரஸ்ரீ எம் நந்தசேன ஆகிய இருவரும் மன்னார் வைத்தியசாலையிலிருந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு பலத்த பாதுகாப்புடன் கொண்டுசெல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## டிராக்டர் விபத்து: 40 தொழிலாளர் படுகாயம்!

### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

நேற்றுகாலை 7-30 மணியளவில் பரந்தன் சந்திக்கு அருகாமையில் ஏற்பட்ட 'டிராக்டர்' விபத்தொன்றில் ஆண், பெண் உட்பட நாற்பதுபேர் படுகாயமடைந்தனர்!

இவர்கள் வயல் வேலைகளுக்காக சென்றுகொண்டிருந்த மலையகத் தொழிலாளர்களாவர்.

உழவுயந்திர [டிராக்டர்] வண்டியுடன் இணைக்கப்பட்ட பின் பெட்டியில் இவர்கள் சென்றனர் என்றும் இப்பெட்டி சுமை தாங்கமுடியாது பின்புறமாக மெல்லமுந்து கவிழ்ந்ததனாலேயே இப்பெரும் விபத்து ஏற்பட்டதென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது விபத்து நடந்த சில மணிநேரத்தில் காயமடைந்த அனைவரும் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர், எஸ் மீனாட்சி, கே, கனகம்மா ஆகிய இருவரும் ஆபத்தான நிலையில யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பலர் கை கால்கள் முறிவடைந்த நிலையில் இரத்தக் காயங்களுடன் காணப்படுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பி நவரத்தினராஜா காயமடைந்தவர்களின் நலன்களை கவனித்து வருகிறார், வைத்தியசாலை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சார்ஜன்ட் பரீத் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர், (கி)

## சிகரெட் வான் கொள்ளை: உள்வீட்டு 'நாடகம்'?

[மன்னார்]

முருங்கன – மடு வீதியில் நேற்றுமுன்தினம் சிகரட்வான் கொள்ளையடிக்கப்பட்டதாகப் பொலிசில்செய்யப்பட்ட புகார் பொய்யானதென்றும், வானில் சென்ற சாரதி, விற்பனையாளர், கிளீனர் ஆகியோரே பணத்தைக் கையாடிவிட்டு மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவர் கொள்ளையடித்துச் சென்றதாகப் பொய் முறைப்பாடு கொடுத்தார்கள் என்றும் முருங்கன் பொலிசார் விசாரணையில் கண்டுபிடித்துள்ளனர்.

சிகரெட்வானில் 18,000ரூபா கொள்ளை நடைபெற்றதாகச் செய்யப்பட்ட புகாரையடுத்து பொலிசார் மேற்கொண்ட விசாரணையில், பணத்தின் ஒரு பகுதி வானுக்குள் கண்டுபிடிக்கப்பட்டதைத்தொடர்ந்து சிகரட் வான் சாரதி, விற்பனையாளர், கிளீனர் ஆகிய மூவரும் விசாரணைக்காக முருங்கன் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## சேமமடு கொலைமுயற்சி வழக்கில் எதிரி விடுதலை

(யாழ்ப்பாணம்)

சேமமடு கொலைமுயற்சி வழக்கில் விசாரணையின் பின்னர் எதிரி விடுதலைசெய்யப்பட்டார்.

இவ்வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் 78 ஜூலை 8ந் தேதி சேமமடுவில் சிவலிங்கம் என்பவரை சுட்டுக்கொலை செய்யமுயற்சித்ததாக நடராஜா சிவலிங்கம் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

1 வருடம் பாவித்த புதிய 6 கன அடி. SINGER குளிர்சாதன பெட்டி விற்பனைக்கு. தொடர்பு: நாவலர் வீதி, 466/4 மூத்ததம்பி அவனியூ, யாழ்ப்பாணம். 5558

ஒரு பகுதி கற்கள் அகற்றப்பட்ட 100 பரப்பு செம்மண் தரை பழத்தோட்டம் பலாலி விமான நிலையத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் தம்பாலை வீதியில் விற்பனைக்குண்டு. 3 வருட வளர்ச்சியுடைய 100 மா மரங்களும், வேறு பல பழமரங்களும், இருநன்நீர்கிணறுகளும், மூன்று அறைகளைக் கொண்ட வீடும், முழுவளவும் 4 அடி உயரமான மதில் பாதுகாப்பு உண்டு. விபரங்களுக்கு: 399, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 5542

யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியில் MI ரக மிளகாய் நாற்றுக்கள் விற்பனைக்குண்டு. கல்லூரியுடன் தொடர்பு கொள்ளவும், அதிபர். 5573

கொக்குவில் கிழக்கு உடையார் லேனில் 5½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- திருநாவுக்கரசு அன்ட் சன்ஸ், பலாலி ரோட், கோண்டாவில். 5574

## தவறிவிட்டது

பருத்தித்துறை – கண்டாவளைக்கிடையில் எனது சாரதி லைசென்ஸ் இல; DL 412683 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும். இராசு தேவராசா இ. போ. ச கிளி நொச்சி. 5570

## தேவை

யாழ்ப்பாண நகரில் பிரபல பிடவை ஸ்தாபனத்திற்கு ஆண் விற்பனையாளர்கள் தேவை பிடவை வியாபாரத்தில் ஐந்து வருடங்களுக்குக் குறையாத அனுபவமுள்ளோர் நேரில் தொடர்பு கொள்ளவும். உரிமையாளர், க நாகமுத்து அன்சன், 48-50, பெரிய கடை, யாழ்ப்பாணம். 5544

## கல்வி

ஆறு கிழமைகளில் மின்சார தொழில் படித்து உள், வெளி நாடுகளில் தொழில் பெறுங்கள்— 25 வருடங்களாக மின்சார தொழில் கற்பிக்கும் Jaffna Technical School 53 [30] ஸ்டேசன் வீதி, குருநகர். யாழ்ப்பாணம் 5566

## சுவீப்முடிவுகள்

சாமுவேல் அன் சன்ஸ் அன்ட் கொம்பனி லிமிடெட், நல்லூர் கிளை யாட்டுச்சுழற்சியில் 20ம் திகதி நடாத்தப்பட்ட சுவீப் இழுப்பில் வெற்றிபெற்ற இலக்கங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1ம் | பரிசு | A | 479 |
| 2ம் | பரிசு | C | 340 |
| 3ம் | பரிசு | C | 493 |
| 4ம் | பரிசு | A | 104 |
| 5ம் | பரிசு | C | 155 |

[5581]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறித்தல்

ஊர்காவற்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற காரைநகர் வடக்கு, சக்கலாவோடை கார்த்திகேசு. இராமுப்பிள்ளை கைம்பெண் தங்கமுத்து என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மலேசியா, குவாலாலம்பூர், 5-ம் மைல் பழைய கிளாங் வீதி, இல: 7. ஜாலன் தையாமன் 10 ஆறுமுகம் கைம்பெண் தெய்வானை, இவளின் அற்றோர்ணித்தத்துவகாரர் காரைநகர் வடக்கு, சக்கலாவோடை இ கந்தசாமி கைம்பெண் மனோன்மணி அம்மாள்

மனுதாரர்

உரிமைத்) இல: 74
தத்துவம்)

மேலேயுள்ள இலக்கங்கொண்ட உரிமைத் தத்துவ வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1982ம் ஆண்டு கார்த்திகை மாத 11ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக்காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
(ஒப்பம்)
அ. சிறில்,
பதிவாளர்.

1982 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15 ந் திகதி காரணம் காட்டும் தவணை 6-1-83.

(ஒப்பம்)
அ. சிறில்,
பதிவாளர்.

5580

## யாழ்ப்பாண மாநகராட்சிமன்றம் கேள்விப்பத்திர அறிவித்தல்

1983-ம் ஆண்டுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தால் நடாத்தப்பட்டுவரும் பிரசவ விடுதிகளில் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்குரிய கேள்விப்பத்திரங்கள் 28-12-82-ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விகள் அன்றையதினம் பிற்பகல் 3-30 மணிக்குத் திறக்கப்படும் விரும்பிய கேள்விக்காரர்கள் அப்பொழுது பிரசன்னமாயிருக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் 27-12-82-ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் ரூபா 50-00 வைப்புப்பணமாகவும் ரூபா 5-00 கேள்விப்பத்திரக் கட்டணமாகவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

இதன்கீழ் கையொப்பம் வைத்திருப்பவரிடமிருந்து அல்லது சுகாதார வைத்திய அதிகாரியிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் பற்றிய ஏனைய விபரங்களையும், நிபந்தனைகளையும் தேவையானோர் பெற்றுக்கொள்ளலாம்.

சி. வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

சுகாதாரப்பகுதி,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
14-12-82. 5582

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

இல: 84 அ– பிரிவுகள் 524,532

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற பருத்தித்துறை புலோலி தெற்கு சபாபதிப்பிள்ளை கைம்பெண் உமைபாத்தையின் மரணசாதன சொத்துவிடயத்தில்

காலஞ்சென்றவர்

சபாபதிப்பிள்ளை திருநாவுக்கரசு, புலோலி தெற்கு, புலோலி

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம்
இல: 1153/T

மேற்குறித்த இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு காலஞ்சென்றவரின் மரணசாதனத்தை இம்மன்றில் நிரூபிப்பதற்கும் அவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்குமாக மேற்குறித்த நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

இவ்விடயத்தில் அக்கறையுள்ள எவரேனும் குறித்த பின்னுறுதிக்கட்டளை முற்றுனதாக்கப்படுவதற்கு மாறாகக் காரணமேதும் காண்பிக்க இருப்பின் இம்மன்றில் 1982ம் ஆண்டு கார்த்திகை மாதம் 11ந் திகதி முற்பகல் 9-45 மணிக்குத் தோற்றி அக்காரணங்களை வெளிக்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1982-ம் ஆண்டு ஆவணி மாதம் 16-ந் திகதி.

நீதிமன்றக் ஆணைப்படி
(ஒப்பம்)
க. செல்வராசா,
பதிவாளர்.

வரைவு:
ஒப்பம்
வ. செல்லையா,
மனுதாரின் சட்டத்தரணி.

காரணம் காண்பிக்கும் காலவெல்லை. 1983-ம் ஆண்டு தை மாதம் 7-ந் திகதிக்கு நீடிக்கப்படுகிறது.

நீதிமன்ற ஆணைப்படி,
(ஒப்பம்]
க. செல்வராசா,
பதிவாளர்.

5579

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் காணமற்போன பற்றுச்சீட்டு புத்தகம் பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தினால் இறைவரிப் பரிசோதகர்கள் மூலம் அறவிடப்படும் வாடகை, வியாபார வரி ஏனைய கட்டணங்கள் போன்றவற்றிற்கு வழங்கப்படும் பற்றுச்சீட்டுக்கள் இல 255801 முதல் 255900 வரை கொண்ட 2559-ம் இலக்கப் புத்தகம் காணமற்போய்விட்டது.

வரியிறுப்பாளர் எவரும் இந்த இலக்கங்களைக்கொண்ட பற்றுச்சீட்டுகளின் பேரில் பணம் எதுவும் எவருக்குச் செலுத்தவேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். எவராவது ஏற்கனவே இந்த இலக்கங்களைக்கொண்ட பற்றுச்சீட்டு எதன் மீதும் பணம்செலுத்தியிருந்தால் அவை செல்லுபடியாகாது என்பதனால் அவற்றை உடன் யாழ். மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

சி. வி. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
20-12-82. 5565

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வட்டுக்கோட்டை மேற்கிலிருந்த மரணசாதனம் செய்யாதிறந்த சிவசம்பு மகள் முன்பு (பாலசுப்பிரமணியம் பெண்) பிரகாசவதியின் மரணச்சொத்து விடயத்தில்.

— மரணமெய்தியவர்.

மரணச்சொத்து
நியாயாதிக்கம்
இல. T/3710

வட்டுக்கோட்டை மேற்கு பாலசுப்பிரமணியம் மகள் சசிமா – மனுதாரர்.

எதிராக

1. வட்டுக்கோட்டைமேற்கு பாலசுப்பிரமணியம் மகள் வனஜா
— பராயமற்றவர்
2. அவ்வூர் பாலசுப்பிரமணியம் கண்ணன்.
3. அவ்வூர் சிவசம்பு கைம்பெண் பாறுப்பிள்ளை.
—எதிர்மனுதாரர்கள்.

மேலே கொண்டிருக்கின்ற இலக்கங்கொண்ட தத்துவ வழக்கு மேலே குறிப்பிட்டிருக்கும் இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்கு கொடுக்கப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கறையுள்ள எவரேனும் 1983ம் ஆண்டு தைமாதம் 7ம் திகதி அன்று முற்பகல் ஒன்பது மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றாக்கக்கூடாதென்று தகுந்த காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றீர்.

1982ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19ம் திகதி.

[ஒப்பம் விளங்கவில்லை]

பதிவாளர்

தயாரித்தவர்:
நா. ஏகாம்பரம்
மனுதாரின் சட்டத்தரணி.
[5564]

## கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம் பரந்தன் கேள்வி விண்ணப்பங்கள்

வெற்றுச் சாக்குகள்,
லாறி ரயர்கள் (பழையது)

எமது சங்கத்தில் மேற்படி பொருட்களுக்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம்செய்ய விரும்புபவர்கள் பொருட்களை நேரில் பார்வையிட்டு, விண்ணப்ப வைப்புப் பணத்தினைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி, பதிவுத் தபால் மூலம் தலைவர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன் என்ற முகவரிக்கு 27-12-82க்குப் பிந்தாமல் [கடித உறையில் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்ப விபரத்தினை எழுதி அனுப்புதல்வேண்டும்.

1. வெற்றுச் சாக்குகள் விண்ணப்ப வைப்புப் பணம் ரூபா 110/- [ரூபா 100/- திருப்பி வழங்கப்படும்]
2. லொறி ரயர்கள் [பழையது]

| சைஸ் | | தொகை |
|---|---|---|
| 900X20 | — | 03 |
| 8 25X16 | — | 01 |

வைப்புப்பணம் ரூபா 60/- [ரூபா 50/- திருப்பிவழங்கப்படும்].

குறிப்பு: 27-12-82 நண்பகல் 12 மணிக்கு கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படும்.

பொதுமுகாமையாளர்.

கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்
பரந்தன். 5571

## மாணவிக்கு பாராட்டு

[கரவெட்டி]

யாழ். கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் 6ம் வகுப்பில் மாணவர்களைச்சேர்த்துக்கொள்வதற்கான பரீட்சையில் கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரியைச் சேர்ந்த மாணவி செல்வி முத்துலிங்கம் மைதிலி ஆகக்கூடுதலான புள்ளிகளைப்பெற்று சாதனை நிலைநாட்டியுள்ளார்.

இத்தகவலை யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு வெ சபாநாயகம் தெரிவித்தார்.

நெல்லியடி 'இராசலிங்கம்' மண்டபத்தில் நடந்த உடுப்பிட்டிக் கல்விவட்டார அதிபர்களின் வருடாந்த மதியபோசன விருந்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

பிரஸ்தாப மாணவியின் திறமையைக்கண்டு யாழ். கல்வித்திணைக்களம் மகிழ்ச்சி அடைந்ததுடன், மாணவியையும் அவர்கல்விபயின்றகட்டைவேலி ஞானசாரியார் கல்லூரி அதிபர்கள் ஆசிரியர்களையும் பாராட்டி இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### 1983ம் ஆண்டுக்கு வழங்கலர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல்

1983 ஆம் ஆண்டுக்குத் தேவையான பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்கும், ஒப்படைப்பதற்கும் இப் பல்கலைக்கழகத்துடன் பதிவு செய்துகொள்ள விரும்பும் உள்நாட்டு வழங்கலர்களிடமிருந்தும் ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வழங்கப்படவேண்டிய பொருட்கள், சேவைகள் ஆகியவற்றிற்கான விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் நேரடியாகவோ அல்லது தபால்மூலமாகவோ பெற்றுக்கொள்ளமுடியும், தபால் மூலம் விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோள் விடுப்பின் சுயமுகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட (9''×4'') அளவுடைய தபால் உறையொன்று கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை நேரடியாகப் பெறுவதாயின் அதுபற்றி இப்பல்கலைக்கழக நிதியாளரின் அலுவலகத்தில் விசாரிக்கவும்.

எல்லா விண்ணப்பங்களும் ஒவ்வொரு பதிவுசெய்தலுக்கும் 10/-ரூபா காசுக்கட்டளை/காசோலையுடன் 1982 திசம்பர் 31 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னதாகவோ சேரக்கூடியதாக நிதியாளர், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படுதல்வேண்டும். "1983ம் ஆண்டுக்கு வழங்கலர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல்" என்னும் சொற்கள் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதப்படல்வேண்டும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம். 5528

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# "இஸ்ரேலுக்கான உதவிகளை உலகநாடுகள் நிறுத்த வேண்டும்!"

## ஐ. நா. பொதுச்சபை அறிவிப்பு

நியூயோர்க் டிச 21

இராணுவ பொருளாதார உதவிகளை இஸ்ரேலுக்கு வழங்குவதை உலக நாடுகள் நிறுத்த வேண்டுமென ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

நேற்று ஐ. நா. வின் பொதுச்சபை கூடியபோது இஸ்ரேலுக்கு இராணுவ, பொருளாதார உதவிகளை வழங்குவதை உலக நாடுகள் நிறுத்தவேண்டுமென கியூபா, பங்களாதேஷ், இந்தியா உட்பட பல நாடுகள் தீர்மானமொன்றைக் கொண்டு வந்திருந்தன.

இத்தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது 113 வாக்குகள் ஆதரவாகக் கிடைத்தன. 17 வாக்குகள் எதிராகக் கிடைத்தன.

ஆதரவாக வாக்களித்த நாடுகளில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளே கணிசமாக இருந்தன. சில ஐரோப்பிய நாடுகளும் காணப்பட்டன.

எதிராக வாக்களித்தவைகளில் அமெரிக்கா உட்பட ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் அங்கம் வகிக்கும் அபிவிருத்தியடைந்த நாடுகள் சில காணப்பட்டன.

ஐ. நா வில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட இத் தீர்மானத்தில், இஸ்ரேல் அது ஆக்கிரமித்துள்ள சகல அரபுப் பிரதேசங்களிலிருந்தும், பாலஸ்தீனருக்குச் சொந்தமான நிலப்பிரதேசத்திலிருந்தும் எவ்வித நிபந்தனையுமின்றி முற்று முழுதாக வெளியேற வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [கி]

## லெபனானுக்கு பிரிட்டிஷ் வேவுபார்க்கும் அணி!

பெய்ரூட் டிச. 21

லெபனானிலுள்ள ஐ. நா. சமாதானப் படைப் பிரிவுக்கு வேவுபார்க்கும் பிரிவொன்றை பிரிட்டன் அனுப்பி வைக்கவுள்ளது. இப் பிரிவில் சுமார் 80 பேர் அடங்குவார்கள்.

லெபனான் வெளிநாட்ட மைச்சர் அண்மையில் பிரிட்டனுக்கு விஜயம் செய்திருந்தார். அங்கு பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி திரு. பிரான்ஸிஸ்பிம் முடனான பேச்சு வார்த்தைகளின்போது பிரிட்டனின் வேவு பார்க்கும் இராணுவப் பிரிவொன்றை பெய்ரூட்டுக்கு அனுப்பி வைக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார். இதனையடுத்தே பிரிட்டன் பெய்ரூட்டிலுள்ள ஐ நா. படைக்கு தனது வேவு பார்க்கும் பிரிவை அனுப்பி வைக்கிறது.

லெபனானில் தற்போது சுமார் 2000 க்கும் அதிகமான ஐ நா. படைகள் நிலைகொண்டுள்ளன. பிரான்சு, அமெரிக்க, இத்தாலிய துருப்புக்களே இத்தொகையில் அடங்குகின்றன. பிரிட்டனின் இராணுவப் பிரிவொன்று லெபனானுக்கு அனுப்பி வைக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

## குஜராத் சட்டப்பேரவை முடிவுகள்

புதுடில்லி. டிச. 21

குஜராத் மாநில சட்டசபைத் தேர்தல்களின் இரு தொகுதிகளுக்கான முடிவுகள் வெளியாகியுள்ளன.

இந்த இரு தொகுதிகளில் ஒன்றில் இந்திரா காங்கிரஸ் கட்சியும், மற்றையதில் பாரதீய ஜனதா கட்சியும் வெற்றி பெற்றுள்ளன.

ஏனைய தொகுதிகளில் வாக்குகள் எண்ணப்பட்டுவருகின்றன முடிவுகள் இன்னும் இரு தினங்களில் முழுமையாக வெளியிடப்படுமென்று அறிவிக்கப்பட்டது. (கி)

## வட யேமனில் கொள்ளை நோய் அபாயம்

சானா டிச. 21.

பூமி அதிர்ச்சியினால் பெரும் அழிவுக்குள்ளான வட யேமன் கிராமங்களில் ''கொள்ளை நோய்' பரவும் ஆபத்து ஏற்

(6-ம் பக்கம் பார்க்க)

### சோவியத் துருப்புகள்

## முழுமையான உத்தரவாதமின்றி ஆப்கானிலிருந்து வெளியேறாது!

### -- ஆப்கான் பிரதமர் கர்மல்

மாஸ்கோ டிச 21

''ஆப்கானிஸ்தானில் இருந்து வரும் சோவியத்துருப்புகள் முழுமையான பாதுகாப்பு உத்தரவாதமின்றி அங்கிருந்து வெளியேற முடியாது'' என்று ஆப்கான் பிரதமர் கர்மல் சோவியத்யூனியனில் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்தார்.

பிரதமர் கர்மல் சோவியத் யூனியன் ஸ்தாபிக்கப்பட்ட 60 வது ஆண்டு விழாக்கொண்டாட்டங்களில் பங்கு பற்ற மாஸ்கோ வந்துள்ளார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது: ''ஆப்கானிஸ்தானில் வெளிநாட்டுச் சக்திகளின் தலையீடுகள் அதிகரித்துள்ளன.

பாகிஸ்தானுடன் ஆப்கானிஸ்தான் பேச்சுக்களை நடத்த அமெரிக்க தடையாக உள்ளது.

ஆப்கானிஸ்தானில் எதுவித தலையீடுமற்ற சுமுக நிலை ஏற்படும் பட்சத்திலேயே அங்கிருந்தும் சோவியத் துருப்புகள் வெளியேறும்'' என்றார்.

ஆப்கானிஸ்தானில் இருவருடங்களுக்கு முன்னர் சோவியத்துருப்புகள் ஆக்கிரமிப்பை மேற்கொண்டன. அன்றிலிருந்து சுமார் எண்பதினாயிரம் வரையிலான சோவியத்துருப்புகள் ஆப்கான் கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன் பல ஆப்கான் கிளர்ச்சியாளர்களும் ஆயிரக்கணக்கில் மரணமாகியுள்ளனர், சில தீவிரவாத கிளர்ச்சியாளர்கள் இன்றும் பதுங்கியிருந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். (கி)

## ஆடம்பரக்கப்பல் 'சிதம்பரத்தில்' ரூ. 28 லட்சம் கள்ளக்கடத்தல்!

சென்னை டிச. 21.

ஆடம்பர உல்லாசக் கப்பலான 'எம். டி சிதம்பரத்தில்' இருந்து சுமார் 28 லட்சம் ரூபா பெறுமதியான கள்ளக் கடத்தல் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அண்மைக்காலங்களில்சென்னை சுங்கப்பகுதியால்முறியடிக்கப்பட்ட பெரும் கள்ளக்கடத்தல் இதுவென சென்னை சுங்க சேகரிப்பாளர் தெரிவித்தார்.

திண்ணக்களக் களஞ்சியம் ஒன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டதுபோல 12 மரப்பெட்டிகள் கடந்த வியாழக்கிழமை சிங்கப்பூரிலிருந்து இக் கப்பலில் சென்னை வந்து சேர்ந்தன

சந்தேகத்தின் பேரில் இவற்றைச் சோதனையிட்டபோதே பெருந்தொகையான பொருட்கள் இவற்றினுள் கடத்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப் பட்டது.

ஐந்து பெரிய வர்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள், வீடியோ புகைப்படக்கருவிகள், மற்றும் வீட்டுப் பாவனைகளுக்கான மின்சார உபகரணங்கள், கைக் கடிகாரங்கள் என்பன இப்பன்னிரண்டு பெட்டிகளிலும் இருக்கக் காணப்பட்டன.

இக்கள்ளக் கடத்தல் தொடர்பாக ஒருவர் சுங்கப் பகுதியினரால் கைது செய்யப் பட்டுள்ளார். [கி]

## "சமாதானப் பேச்சுகளுக்கு மாக்ஸிஸ.தத்துவங்கள் தடை"

### - பரிசுத்த பாப்பரசர்

ரோம் டிச 21

''போர் தவிர்ப்பு சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள மாக்ஸிஸ கொள்கைகள் தடையாக உள்ளன'' என்று பரிசுத்த பாப்பரசர் கவலை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாந் திகதி உலக சமாதான தினமாக அனுட்டிக்கப் படவுள்ளது இத்தினத்தை முன்னிட்டு பாப்பரசர் வெளியிட்டுள்ள செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் பாப்பரசர் தெரிவித்துள்ளதாவது: நாடுகளுக்கிடையே போர் மனப்பான்மை அதிகரித்து வருகின்றது அபிவிருத்தி திட்டங்களை விட இராணுவச் செலவீனங்களுக்கே பெருமளவு பணம் விரயமாகின்றது.

பலமிக்க நாடுகள் இராணுவ ரீதியாகவலிமை கொண்டுள்ளதோடு வறிய நாடுகளையும் தூண்டி போர்களை ஏற்படுத்தமுனைகின்றன. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் அடைந்த நாடுகளுக்குமிடையிலான விரிசல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

சமாதானப் பேச்சுக்களை உலகநாடுகள் சில நடத்த முன்வருகின்ற போதிலும் அவற்றில் சில கொண்டிருக்கும் மாக்ஸிஸ தத்துவங்கள் அப்பேச்சுக்களை வெற்றியடைய மல் போகச் செய்து விடுகின்றன'' (கி)

மற்றுமொரு பொன்னான சந்தர்ப்பம்




GS

கோல்ட் ஸ்டார்
20" வர்ணத் தொலைக் காட்சி

சிறப்பு அம்சங்கள்:
- துரித இயக்கப் படக் குழாய்... நான்கு விநாடிகளில் படமும் ஒலியும் கிடைக்கின்றன. சூடேற வேண்டிய அவசியமில்லை.
- தன்னியக்க வர்ணக் கட்டுப்பாட்டு அமைப்பின் மூலம் வேறுபடும் வர்ணப் படங்களின் செறிவு தானாகவே தரப்படுத் தப்படுகின்றது.
- காந்தவியல் தலையீட்டினால் வர்ணப் படத்தில் கறைகளைத் தன்னியக்க ''டிகோஸர்'' சாதனம் போக்குகின்றது.
- 1 வருடகால உத்தரவாதமும் விற்பனைக் குப் பின் பராமரிப்புச் சேவையும்.
- அடக்கமான அளவு-50 செ.மி; எங்கும் வைக்கக்கூடியது.

கோல்ட் ஸ்டார்
வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை வாங்குங்கள்—நிகரற்ற செயற்திறன், நிகரற்ற விலை.

ஏகமுகவர்கள்:
பான் ஏசியா லிமிட்டெட்

விற்பனை நிலையங்கள்:
கொழும்பு-172, கெய்சர் வீதி, கொழும்பு 11. தொலைபேசி: 26598, 22376
காட்சியறை; 666, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 589794
திருகோணமலை- 57, தபால் நிலைய வீதி, திருகோணமலை.
யாழ்ப்பாணம்- 95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7697
நாட்டிலுள்ள ஏனைய பிரபல வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

## மணிவாக்கு

நம்மிடையே உழைக்காது வாழ்பவர்களும் இருக்கிறார்கள்; வாழாது உழைப்பவர்களும் இருக்கிறார்கள்; இதுதான் தொல்லை.

— கோல்டன் காமமென்ட்.

# நமது நோக்கு

## ஆச்சரிய நிகழ்ச்சி

மனிதர் மூன்று வகைப்பட்டவர்கள: முதல், இடை, கடை என்று பிரிக்கப்படுகின்றனர்.

கருத்துக்களில் கவனம் செலுத்தி அவற்றின் உண்மையை ஆராய்வோர்முதல் வகுப்பினர்.

சம்பவங்களில் நாட்டங்கொண்டு அவற்றை ஆராய்ந்து முடிவு காண்பவர் இடை வகுப்பினர்.

மற்றவர்களின் விவகாரங்களில் அவர்களின் குறை நிறைகளில் சுவைகண்டு பேசுபவர்கள் கடை வகுப்பினர்.

பெரும்பான்மை மக்கள் கற்றல் கேட்டல் போன்ற அனுபவங்களில் அறிவு காணாத நிலையில் கடை வகுப்பினராகக் காணப்படுவது இயற்கை.

இன்று தேர்தல் 'திருவிழா'வின் 'சத்தம் சாவடி' எதனையும் காணவில்லையே! ஆரவாரம், குதூகலம், மக்கள் கூட்டம், சனப் புழக்கம்— இவைதான் தேர்தல் சின்னங்கள்; இவற்றைக் காணாது ஏமாறும் பேர்வழிகளே நாம் குறிப்பிடும் கடை வகுப்பினர்.

கட்சி அடிப்படைத் தேர்தலையே விரும்பாத மக்கள் இன்றும் உண்டு. கட்சி சார்பானாலும், அதன்வேட்பாள மனிதரே முக்கியம். வாழ்க்கை கோட்பாடு, அரசியல் குறிக்கோள் எதுவானாலும் மனித வேட்பாளரில் உண்டாகும் கரிசனையே தேர்தல் விழாவுக்குச் சிறப்பளிக்கிறது.

குறிப்பிட்டகட்சிக்குவாக்களிக்க, தங்கள் பிரதிநிதி யாரென்று தெரியாத வாக்காளர் ஒரு × இடம்பெறுவதின் தாற்பரியத்தைப் புரிய முடிவதில்லை.

இந்த நிலையில் நாடாளுதிலும் குடமா, விளக்கா? என்று கேட்டால்' அதற்கு விடையளிக்க மக்கள் திரள்வது ஒரு அசாத்தியமான காரியம்! — போலிருக்கும்: நாடாளுவதற்கும் இரண்டு வெறும் சின்னங்களா ?

பொதுத் தேர்தல்கள் பல கண்ட மக்கள், அதன் விழாவில் திளைத்து, தங்கள் அதிகாரத்தின் சிறப்பை உணர்ந்த வாக்காளர்கள் இன்று மலைத்துப் போயிருப்பதானால் நிச்சயம் மக்கள் தீர்ப்பு பொதுத் தேர்தலுக்கு ஒப்பாகாது.

இவ்வருட நத்தார்ப் பண்டிகையை நிறுத்தி, அதில் செலவிடும் பணத்தைத் திரட்டி ஒரு பொதுஜன வாசிகசாலை அமைப்போம் என்றால் எத்தனை இதயங்கள் எழுச்சிபெறும்? புது உடை, உணவு. வெடி, கூட்டம், கும்மாளம் நின்றுவிடுமா? நடவாதகாரியம்.

பொதுமக்களின் வஞ்சனையற்ற நெஞ்சம் கரவாகிய கல்வியுடையவரின் உள்ளத்தைப் போன்றதல்ல.

பொதுத் தேர்தல் வேறு; 'பொது மக்கள் தீர்ப்பு' வேறு: இந்த நிலைமையில் இன்றைய வைபவம் ஒரு ஆச்சரிய நிகழ்ச்சியே! விளக்கென்றால்யார்? பானை என்றால்யார்என்பது புரியவேண்டும்; அதற்கு மானிடவடிவம்வேண்டும்; அதுவும் நமக்குத்தெரிந்த, நமது சபிமானத்துக்குரிய பேர்வழியாகவிருக்கவேண்டும் அந்த மனிதத்தொடர்பில்லாத வாக்கெடுப்பு பழக்கமில்லாத பண்டமென்பது இன்று நாம்காணும் காட்சி.

அரசியல் கருத்துப் பரிமாறல் ஒரு நீண்ட மரபாக வளர்ந்துவரும் நாடுகளிலும், சர்வஜனவாக்கெடுப்பு ஒரு உயிர்த்துடிப்பில்லாத சம்பவமே! பொதுத்தேர்தலுக்குப் பதிலாக அதனைப் பயன்படுத்துவதானால் மக்களை இந்நாட்டு மன்னரென்று எவ்வாறு சொல்வது

அதிகாரபீடம் ஏறுவது ஒருபெரும் போட்டியாகவே நீண்டகாலமிருக்கப் போகிறது; சூழல் மாறிவரும் போது, புதிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன; அதனைப் பயன்படுத்தி ஒருவர் தோளில் மற்றொருவர் ஏற முயல்வது மனித போராட்டத்தில் சர்வசாதாரணம்.

கருத்துக்கள் பரிமாறும் முதல் வகுப்பினர் இன்றைய நிகழ்ச்சியில் அதிக தாக்கம் ஏற்படுத்தவல்லவர்களல்ல, சம்பவங்களின் நன்மை தீமை ஆராயும் இடைவகுப்பினர் செல்வாக்கும் ஒரு மட்டே!

மூன்றும் வகுப்பினர் லட்சக்கணக்கில் வாக்களிக்க வேண்டும். இன்றைய வெற்றி அதிலே தங்கியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் தங்கள் வாக்கை குறிப்பிட்ட ஒருவேட்பாளருக்கு அளித்துவிட்டார்கள். அதன்முடிவு மீண்டும் ஜனாதிபதி ஜயவர்த்தனாவே பதவியில் ஆறுவருடம் இருக்கவேண்டுமென்பதே!

இன்று அவ்வித தேர்தல் இடம்பெறவில்லை; ஆனால் அத்தேர்தலிலும் அதிக முக்கியத்துவம்வாய்ந்தநிகழ்ச்சி இது, இதனை நன்றாக உணர்ந்துகொள்ளவேண்டும்.

வருகிற வருடம் நடக்க வேண்டிய பொதுத்தேர்தல் நடைபெறுது - இன்று பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பவர்களை தொடர்ந்துஆறுவருடம் இருப்பதை விரும்புகிறீர்களா? ஆமென்றால் விளக்குக்கு நேரே புள்ளடி போடுங்கள்! அப்படிப் போட்டுவிட்டால், நீங்கள் ஒரு பாராளுமன்றப் பொதுத்தேர்தலைக் காண்பது 1889க்கு முன்பு இல்லவென்பது நினைவில் இருக்கட்டும்.

இதனை விரும்பாது பொதுத்தேர்தல் நடைபெறவேண்டுமென்றால் பானைக்கு நேரே புள்ளடி போட்டு வருகிற தேர்தலில் யாரை உங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்ற உரிமையில் உடனடிக் கவனஞ்செலுத்துங்கள்.

இவ்விதத்தெளிவு நாட்டின் வாக்காளர்களுக்கு கிடைப்பது அவசியம் அதற்குப்பதிலாக நடைபெற்ற கூட்டங்களும் கண்டனங்களும், 'மூடிச்சுமாறும்' வைபவங்களும் வீணான முயற்சிகள்! இவற்றிற்கு மேலாக அரசியல், சட்ட நிபுணத்துவத்தின் முட்டையில் பயிர்பிடுக்கும்' சாதனைகள் பொதுமக்களுக்குப் புறக்குடத்துத் தண்ணீரெனக்கொள்க!

எமதுதொகுப்புரை இந்த விளக்கு-பானை விடயம் இமயம் போன்றது; ஒரு பிடி புல்லினால் அதனை மறைக்க முயல்கின்றனர். விழிப்பாக இருந்து சிந்தித்தால் மிகச் 'சிம்பிளான' காரியம். பலர் பயன்படுத்தும் நல்லெண்ணெய்க்கின்று இந்தக் 'கோசு' ஏலவே இறைக்கவேண்டியதா; இப்போது இறைப்பதா அல்லது மற்ற முறையா? பானையா? அல்லது விளக்கா? லட்சக்கணக்கில் வம்மின்! வரலாறு காணாத தீர்வு காண்மின்!

# சோதிதிறம்பாடுதல்

மாணிக்கவாசகசுவாமிகள் தமது திருவாசகப் பதிகங்கள், அகவல்கள் யாவற்றிலும் சிவபெருமானை சோதிஎன்றேபாடியருளியுள்ளார். அருக்கனுக்குச் சோதி கொடுத்தவர் பெருஞ்சோதி அவர் பரஞ்சோதி அவர் ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெருஞ்சோதி.

சோதி என்னும்போது இறைவன் ஒளி மயமானவன் என்பது பெறும். சோதி என்னும்போது, அது அண்டசோதி, பிண்டசோதி, மனச்சோதி, ஞானசோதி, சிவசோதி என ஐந்து வகையாக நிலவும் என்று திருமூலநாயனார் திருமந்திரத்தில் அருளியுள்ளார்.

### அண்ணாமலையான் அடிக்கமலம்

திருவண்ணாமலை முன்னர் திருமாலும் நான்முகனும் காணாப் பெருஞ்சோதி மயமாக எழுந்தது அது உயிரைப் பற்றி நின்று பாசப்பாட்டும் ஆணவமாகிய அகவிருளைப் போக்கும் அரும்பெருஞ்சோதி.

**க.சி. குலரத்தினம்**

அம்பொஞ்சோதியாக வின் புறவிருளையும் போக்கும். அடிக்கமலம் என்பது சிவபெருமானின் திருவடி. அது திருவருளாய சிவசக்தியைக் குறிப்பதாகலின், மாணிக்கவாசக சுவாமிகள் மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி, சிவசக்தியை வியந்ததாகக் கருதவேண்டியது. பாவிக்கவேண்டியது வழிபடவேண்டியது. சென்னிக்கு அணியாக அமையவேண்டியது. அத்திருவடியில் எங்கள் தலைபொருந்தி நிலைபெற்று விளங்கவேண்டும். தாடலை போற்கூடவேண்டும். தாள் + தலை = தாடலை என்பது திருவருட்பயன்

### பாவனையின் உச்சம்

எங்கள் நாளாந்த வாழ்வில் பாவனை என்னும் மனவியல்பு பலதுறைகளிலும் கைகொடுக்கிறது. பாவனையியல் கல்வித்துறையில் உச்சகட்டமாகப் பயன்படுந் தன்மையில், வழிபாட்டிலும் உச்சகட்டத்தில் பயன் தருகிறது ஒன்றை மற்றொன்றாகக் கருதல், பாவித்தல் பாவனை. பாவனையதனிற் சென்று கடவுளை அடையலாம் என்பர் ஆழ்வார்கள்.

### நீராடப்போகும் பெண்கள்

நீராடப்போகும் கன்னிப் பெண்கள், தங்கள் ஊரின் நடுவில் எல்லோர்க்கும் பொதுவாக அமைந்துள்ள குளத்தை நாடுகிறார்கள். அதிகாலையில் சூரியன உதிக்குமுன்பே அவர்கள் நீராடி மீண்டு விடுகிறார்கள். நீராடப்போகும்போதும், நீராடும்போதும், நீராடிமீண்டபோதும் அவர்கள் உரையாடல், பேச்சு, ஏச்சு மூச்சு எல்லாம் இறைவனைப் பற்றியனவாகவே அமைந்தனவாகும். அவர்கள் அண்ணாமலை அப்பனையும் உண்ணாமுலை அம்மையையும் போற்றிப் புகழ்ந்து போய தன்மை, அங்கே வழிபடச் சென்ற மாணிக்கவாசக சுவாமிகளைப் பாடத்தூண்டியது.

### ஞானக்கருத்து

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் பற்றிய சிந்தனை கோட்பாடு சித்தாந்த சாத்திரங்கள் உருவாதன்முன் திருமுறைகளிலும் அவற்றுக்கு முந்திய சங்க காலப் பாடல்களிலும் பொதிந்து கிடந்தது ஆன்மாக்கள். பந்தபாசங்கள் என்பன முப்பொருள்கள் இறைவன் ஆன்மாக்களின் பந்த பாசங்களாகய் மலங்களை நீக்கிக் குணம்பல நல்கி ஆட்கொண்டருளுதல் அலகிலா விளையாடலாகியலாகும்.

# பல்கலை வித்தகர் மானிப்பாய் கா. செல்லையா

சுமார் அரை நூற்றாண்டுக்கு மேலாக ஈழத்துக் கலையுலகில் ஓர் விடிவெள்ளியெனப் பிரகாசித்து, பல்லாயிரக்கணக்கான கலா ரசிகர்களையும், நூற்றுக்கணக்கான கலைஞர்களையும் உருவாக்கியதோடு, இளங்கலைஞர்களுக்கெல்லாம் வழிகாட்டியாகவும், ஆதர்ஸ புருஷராகவும் திகழ்ந்த மானிப்பாய் மிருதங்க வித்துவான் திரு. கா. செல்லையா அவர்களின் திடீர் மறைவு சங்கீதக் கலையுலகத்தையே திகைப்பில் ஆழ்த்திவிட்டது இலக்கியக் களத்தில் பேராசிரியர் கைலாசபதி, தேவன் போன்று கலைக் களத்தில் ஒரு மணி உதிர்ந்து விட்டது.

1945 வாக்கில் ஆனைக்கோட்டை புல்லாங்குழல் வித்துவான் அமரர் ஜீ எஸ். வசந்தகுலசிங்கம் அவர்களுடன் இணைந்து கச்சேரிகள், நாடகங்கள் வானொலியில் தனது மேதாவிலாசத்தைக் காட்டிய மிருதங்க வித்துவான் செல்லையா அவர்கள், 1947-ல் கொழும்பு கொட்டா ரோட் பொரளையில் உள்ள இலங்கை வானொலியில் கச்சேரிகள் செய்து சங்கீத வித்துவான்களை வியப்பிலாழ்த்திய நிகழ்ச்சி இன்றும் நினைவில் பசுமையாகவிருக்கிறது. செல்லையா அவர்கள் கச்சேரிகளுக்குப் பக்கவாத்தியம் வாசிக்கும் பாங்கு, பாடகர்களையே உந்துதற்படுத்திக் கொண்டிருக்கும். பஞ்ச நடைகளையும் தொடுத்து மிருதங்கத்தில் தனி ஆவர்த்தனம் செய்வதில் செல்லையா அவர்களைப்போல் கச்சிதமாகச் செய்து கீர்த்தி பெற்றவர்கள் அக்காலத்தில் வேறு யாரும் கிடையாது. அவர் மேதாவித்தனம் காலகதியில் மிருதங்க வாத்தியத்தையும் கடந்து மேதாவிலாசமாகியது. மிருதங்கம், டோலக், கெஞ்சிரா, தபேலா, கொன்னக்கோல், கடம், தவில், ஆர்மோனியம், புல்லாங்குழல், பாட்டு, ஜலதரங்கம் எல்லாம் அவர் கைவண்ணம் கலையுலகின் சகல துறைகளிலும் பரவியதுடன் அத்வைதத்துறைகளில் பெருஞ்

(5-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## நத்தாரில் குதூகலம் வேண்டுமா?

பல ஆண்டு காலமாக தமிழ் மக்களாகிய நாம் நமது அடிப்படை மனித உரிமைகளை இழந்தும், பயங்கரவாத தடைச் சட்டத்தினால் ஒடுக்கப்பட்டும்வாழும் இக்காலகட்டத்தில் எல்லாவற்றுக்கும் மேலாக மதிக்கும் நமது குருவானவர்களையும், இளைஞர்களை, விரிவுரையாளர்கள் அவர்களது மனைவிமார்களையும் எவ்வித காரணமுமின்றி இராணுவ முகாம்களில் அடைக்கப்பட்டு இருக்கும் இவ்வேளையில் நமக்கு நத்தார் பண்டிகை குதூகலம் வேண்டுமா?

அந்நத்தார் பண்டிகையை நமது சகோதரர்களுக்காக சோக நத்தாராக மாற்றிட ஒவ்வொரு பங்கிலும் வாழ்கின்ற கிறிஸ்தவர்களாகிய நாம் ஒன்றுகூடி [1982] வருகின்ற நத்தார் பண்டிகையை சோகம் நிறைந்ததாக மாற்றிடவேண்டும.

i) நத்தார் வாழ்த்துமடல்கள், வாழ்த்துக்கள் அனுப்ப வேண்டாம், கூறவும் வேண்டாம்.

ii) வேடிக்கையான எந்த ஒரு செயலும் வேண்டாம்.

iii) அன்றையதினம் ஆடம்பரமான உடைகள் எதுவும் அணிய வேண்டாம்,

[vi] வடகிழக்கு மாகாணங்கள் தோறும் அன்றையதினம் திருப்பலிக்காக ஒலிக்கப்படும் ஆலயமணிஓசை துக்கமணி ஓசையாக ஒலிக்கட்டும்.

(V) அன்றையதினத்தில் நடைபெறும் திருப்பலிப்பூசைகள் அனைத்தும் துக்க பலிப்பூசையாக அமையட்டும்.

[vi] அன்றைய தினம் திருப்பலிப்பூசைக்காக குருவானவர்கள் அணியும் ஆடைகள் துக்க ஆடைகளாக அமையட்டும்.

சீ. க. அன்ரனி,
றெக்கிளமேசன்,
குருநகர்.

## சிதம்பரநாதன் தோத்திரம்

உ

நீராடும் சடையானே நிமலா போற்றி
நினைப்பாரின் நெஞ்சிலுறை இறைவா போற்றி
பாராரும் மறைதந்த பரமா போற்றி
பாம்பு புலி காணும் நடராசா போற்றி
தாராரும் சிவ மணிப்பூண் மார்பா போற்றி
சவுந்தராம்பிகையின் தலைவா போற்றி
கரையாத வினையாவும் கரைப்பாய் போற்றி
கவின் பூத்த உலகமெல்லாம் புரப்பாய் போற்றி
தரு பூத்த விண்ணவருக்கரியாய் போற்றி
தவம் பூத்த அடியவர் தமக்கு எழியாய் போற்றி
மரு பூத்த கொன்றையடி முடியாய் போற்றி
மலை பூத்த மங்கையை பங்குடையாய் போற்றி
வான் சுரக்கும் கங்கையை மேல் தரித்தாய் போற்றி
மலர் சுரக்கும் மன்மதனை எரித்தாய் போற்றி
மின் சுரக்கும் பாண்டிய நடாண்டாய் போற்றி
ஊன் சுரக்கும் பெரும் பாவம் தீர்ப்பாய் போற்றி
உளம் சுரக்கும் திருப்பதத்தில் சேர்ப்பாய் போற்றி
தேன் சுரக்கும் கிளிச் சோலை திகழ் ஈழத்து
சிதம்பர நாதனே போற்றி போற்றி.

பா. அருளானந்தன்.

"1989 ஆம் ஆண்டு வரை

# ஆண்டவனைத்தவிர எவராலும் என்னை அகற்ற முடியாது!"

- ஜனாதிபதி ஜே. ஆர்.

(கொழும்பு)

"சர்வஜன வாக்கெடுப்பின் முடிவு எப்படியிருந்தாலும், 1989ஆம் ஆண்டுவரை இந்த நாட்டை ஆளுவதற்கு எனக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆண்டவனைத் தவிர என்னை வேறு எவராலும் அகற்றமுடியாது"

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன ஹவ்லக் டவுனில் நடந்த ஐ. தே. கட்சி இறுதிப்பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருக்கும் நக்ஸலைட்டுகள் தண்டிக்கப்படுவார்கள்.

"வடக்கிலும் பயங்கரவாதத்தை மேற்கொள்ளும் 'புலி'களும் நக்ஸலைட்டுகள் ஆவார்கள். 'குட்டிமணி' என்ற 'நக்ஸலைட்' ஆசாமியை பாராளுமன்றத்துக்குள் கொண்டுவர முயற்சிக்கிறார் அமிர்தலிங்கம். நான் அதிகாரத்திலிருக்கும் வரை இந்த மாதிரித் தீயசக்திகளைப் பாராளுமன்றத்துக்குள் நுழைய அனுமதிக்கவிட மாட்டேன்.

"திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா என்மீது குற்றஞ் சாட்டுகிறார்–தனது ஆதரவாளர்களை கைது செய்வதாக. உண்மையான ஆதரவாளர்கள் என்னுடன் சேர்ந்துவிட்டார்கள்! என்னுடன் சேர்ந்தவர்கள் ஜனநாயகத்தை விரும்புபவர்கள்" (இ)

## வவுனியாவில் ஹர்த்தால்

(வவுனியா)

வவுனியா உண்ணாவிரதப் போராட்டத்தின்போது, இறைம்பைக்குளம் புனிததேவாலயத்தில வண்ணிமாதர்களும், பொதுமக்களும் பொலிஸாரினால் தாக்குண்டதையும் கைது செய்யப்பட்டதையும் ஆட்சேபித்து வவுனியாவில் வர்த்தகர்கள் கடைகளை மூடி ஹர்த்தால் நடாத்தியதற்கும் வவுனியா ஆதார ஆஸ்பத்திரி ஊழியர்கள் 1நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்ததற்கும், உண்ணாவிரத அமைக்குழு சார்பில் காந்தி அமைப்புச் செயலாளர் டாக்டர் சோ இராஜசுந்தரம் நன்றி தெரிவித்துள்ளார்.

## தருமபுரம், விசுவமடு மக்கள் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் மதகுருமாரையும் விரிவுரையாளர் தம்பதிகளையும் இராணுவ முகாமில் தடுத்து வைத்திருப்பதை ஆட்சேபித்து தருமபுரத்தில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

விசுவமடு, தருமபுரம், புளியம்பொக்கணை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மூவாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் இவ்வுண்ணாவிரதத்தில் பங்குபற்றினர். தர்மபுரம் பாலூக்கா தேவாலயத்தில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

உண்ணா விரதிகள் விசுவமடுச்சந்தியிலிருந்து சுலோக அட்டைகளுடன் ஊர்வலமாக தேவாலயத்தைச் சென்றடைந்து உண்ணா விரதத்தை ஆரம்பித்தனர்.

மாலையில் கிளிநொச்சி எம்.பி திரு. வி. ஆனந்தசங்கரி இளநீர்வழங்கி உண்ணா விரதத்தை முடித்து வைத்தார்.

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் ஆசிரியர் திரு. சூசைநாயகம், விசுவமடு ச. ச. நிலையத்தலைவர் திரு. கி. ஆறுமுகம், பரந்தன் ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. இரா. கார்த்திகேசு, திரு. ஆ. தர்மலிங்கம் உரையாற்றினர்.

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கங்கள் இந்த உண்ணா விரதத்தைக் கூட்டாக ஒழுங்கு செய்திருந்தன. (அ)

## பன்றிக்குவைத்த பொறிக்கு ஒருவர் பலி!

[வவுனியா]

துப்பாக்கி சூடுபட்டு விவசாயி ஒருவர் ஸ்தலத்திலே உயிரிழந்தார்.

இச்சம்பவம் வவுனியா பொலிஸ் பகுதியில் உள்ள புளியங்குளம் – சின்னசிப்பிக்குளத்தில் நடந்துள்ளது.

திருமணமாகி 7 மாதமான கபூர் என்பவரே இவ்வாறு சூடுபட்டு மரணமானார்.

விசாரணையின் போது தெரிய வந்ததாவது:- கமத்தில் பன்றிகளைக் கொல்வதற்காக கட்டப்பட்டிருந்த 'கட்டுத்துவக்கு' எனக்கூறப்படும் பொறியில் சிக்கியதினாலேயே இவர் மரணமாகியுள்ளார் என்றும் குணபாலா என்பவர் கமத்துக்குச் சென்றபோதே கபூர் இறந்து கிடப்பதைக் கண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.


இது தொடர்பாக சந்தேகத்தின்பேரில் குணபாலா வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## மாடிக் கட்டடம்

(புலோலி)

பொலிகண்டி அரசினர் தமிழ்கலவன் பாடசாலை மாணவர்களின் வகுப்பறை பற்றாக்குறையை நீக்குமுகமாக ஒரு லட்சத்து இருபதினாயிரம் ரூபா செலவில் மாடிக்கட்டடமொன்று அமைக்கப்படவுள்ளது.

மிளகாய் பயிர்செய்கிறீர்களா?

அப்படியானால் குருமன் நோயை கட்டுப்படுத்த இன்றே பாவியுங்கள்

BAYER

பொலிமட் எஸ்.சி 50%

மேற்கு ஜர்மன் பாயர் ஸ்தாபனத்தின் புதிய தயாரிப்பு, ஒரு சிறந்த சர்வ பூச்சி நாசினி

நெல் / உருளைக்கிழங்கு / திராட்சை
புகையிலை / போஞ்சிவகை / தோடை
காய்கறி / பூஞ்செடி / பருத்தி
பழவகை / கோப்பி / வெங்காயம்

மேலும் பொலிமற், திரிப்ஸ், அழுக்கணவன், வெண் ஈ, சிற்றுண்ணி, போஞ்சி ஈ, தத்துக்கிளி துளை புழுக்கள், ஆகியவற்றை கீழ்வரும் பயிர்களில் திறமாக கட்டுப்படுத்தும்.

பொலிமற் பயிர்களை வேகமாகவும், உடனடியாகவும் வளரச்செய்யும்.

பொலிமற் உடன் கெந்தகம் கலக்கப்படாத பயிர்களை பாதுகாக்க தாமதியாது பாவியுங்கள் பொலிமற்.

தயாரிப்பாளர்:

ஹேகெம் லிமிட்டெட்

400 டீன்ஸ் றோட் கொழும்பு-10

டெலிபோன் 93563 – 96331

The Assaulw Designs


## வழுவூரார் நாட்டிய விழா

சென்னை, டிசம் 21

வழுவூரார் நாட்டிய விழா இம்மாதம் 24ம் திகதி முதல் ஜனவரி 1ம் திகதி வரை சென்னை, மயிலாப்பூர், ரசிகரஞ்சனி சபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலைமாமணி வழுவூர் ரா. சாம்ராஜ் இந்த நாட்டிய விழாவை ஏற்பாடு செய்கிறார். வழுவூரார் கர்நாடக, பரதநாட்டிய கலைமன்றத்தின் இயக்குநரான இவர், இளைய தலைமுறையினர் பலருக்கு பயிற்சி அளித்து, அவர்களை அரங்கேற்றி வருகிறார். இவரது தந்தை வழுவூர் ராமையா பிள்ளையிடம் பயின்றவர்கள் நாட்டிய உலகில் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறார்கள்.

இந்நாட்டிய விழாவை 24ம் திகதி வெள்ளிக்கிழமை தமிழ்நாடு கவர்னர் ஸ்ரீ எஸ். எல் குரானா ஆரம்பித்து வைக்கிறார். நீதியரசர் ஸ்ரீ பி ஆர் கோகுல கிருஷ்ணா தலைமை வகிப்பார். சங்கீத கலாநிதி செம்மங்குடி சிறினிவாசஐயர் வாழ்த்துவார்.

24ந் திகதி ஆரம்பநாள் விழாவில் 'திருமலைகுறவஞ்சி' நாட்டிய நாடகம் இடம்பெறும் தொடர்ந்து 8 நாட்களுக்கு விழா தினசரி மாலை நடைபெறும்.

## சமுதாய நலனிலும் கலைஞர்கள் அக்கறை கொள்ள வேண்டும்

(மாவிட்டபுரம்)

'கலைஞர்கள் தமது கலையை வளர்ப்பதுடன் தமது சமுதாய நலனிலும் அக்கறை கொள்ளவேண்டியது அவசியம், இதற்கு முன்னோடியாக விளங்கியவர் அமரர் டி. என். இராஜரத்தினம்பிள்ளை. நாதஸ்வர வாத்தியத்தில் தலைசிறந்து விளங்கியதுடன் சமுதாய நலனிலும் பெரிதும் அக்கறை கொண்டிருந்தவர் அவர்'

இவ்வாறு நாதசுர சக்கரவர்த்தி டி. என். இராஜரத்தினம்பிள்ளையின் நினைவுநாள் விழா மாவிட்டபுரத்தில் கொண்டாடப்பட்டபோது அதில் கலந்துகொண்டு பேசிய இலங்கை இசைவேளாளர் சங்கச் செயலாளர் திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம் கூறினார்.

இசைவேளாளர் சங்க ஆதரவில் சங்கத் தலைவர் திரு என் ஆர். சின்னராஜா தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறிதாவது:-

'அமரர் இராஜரத்தினம் பிள்ளை தமக்கேயுரித்தான பாணியில் நாகசுர வாத்தியத்தைக் கையாண்டு தலைசிறந்த கலைஞராகத் திகழ்ந்தார் அத்துடன் தமது சமுதாயத்திலிருந்த தகாத வழக்கங்களையெல்லாம் முன்னின்று ஒழிக்கப் பாடுபட்டார் அவரால் சமுதாய சீர்திருத்தம் ஏற்பட்டது என்றால் மிகையாகாது.' மற்றும் பலரும் பேசினர்.

## பல்கலைவித்தகர்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சமர்த்தராகவும் விளங்கினார். இவ்வகையில் அவர் ஓர் தான்தோன்றிக் கலைஞராகவும் திகழ்ந்தார்.

இத்தகைய மேதையான மாபெரும் கலைஞனை 1947ல் நான் குருவாக ஏற்று அவரிடம் மிருதங்கம் பயின்றகாலம் தொட்டு அவர் அமரராகும் வரை எனது கலைக்குருவாகவும், தந்தை போலவும் வழிகாட்டியாகவும் வரித்துக் கொண்டு அவருடன் பழகிய அனுபவங்கள் அளப்பரியன. விரிவஞ்சி அவற்றை இங்கு தவிர்த்துள்ளேன்.

அவர் வழிகாட்டலில் வளர்ந்த கலைஞர்களில் அமரர்களான குழந்தைவேல், நாகமுத்து, மார்க்கண்டு, கணபதி போன்றோரையும், தற்போது கலையுலகில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் நடிகமணி வயிரமுத்து, கந்தையா, பரமசாமி, பூதப்பிள்ளை, சின்னத்துரை போன்றோரையும் இன்னும் பலரையும் குறிப்பிடலாம்.

அத்துடன் அவர்தம் கலைப்பணி நிற்கவில்லை. அரசியல் சமூகப் பிரச்னைகளிலும் மற்றும் வைத்தியம், தச்சுத் தொழில், விவசாயம், யந்திர வேலை, கட்டிடம் ஆகிய துறைகளிலும் கைதேர்ந்த கலைஞராகத் திகழ்ந்தார். அத்தனைக்கும் அவர் தேடிய தேட்டம் வறுமையாயினும் அந்த வறுமையிலும் செம்மை கண்ட செல்வர்.

அக்காலத்து மிருதங்க வித்துவான்களான கொண்டையடி தம்பாப்பிள்ளை, ஆனைக்கோட்டை மயில்வாகனம் போன்ற கலைஞர்களுடன் நாடகக்கொட்டைகளிலும் காவடியாட்ட அரங்குகளிலும் பொருதி–போட்டியாக வாசித்து கலைஞர்கள் மத்தியில் மாத்திரமல்ல மக்கள் மத்தியிலும் முதன்மை ஸ்தானம் பெற்று பெரும்கியாதி பெற்றிருந்தார். பருத்தித்துறை தவில் வித்துவான் குண்டுமணி, மானிப்பாய் நாதஸ்வரக் கலைஞர் கதிரவேலு ஆகியோருடன் பலதடவை தவில்கச்சேரி வைத்து மங்கள முழக்கம் செய்த இந்தப்பல்கலைக்கலைஞர் கா. செல்லையா அவர்கள் கலையுலகத்திற்களித்த பங்களிப்பும் உருவாக்கிய கலைஞர்களும் ஏராளம்.

ஆறு புதல்விகளுக்கும் சமைபாதம் என்ற புதல்வருக்கும் தந்தையான இப்பெருங்கலைஞர் ஓர் புதல்வியை அகாலமாய் இழந்து ஏனைய மக்களை தமது குடும்பச்செல்வங்களாக வாரிசாக விட்டுப்பிரிந்துள்ளார். ஈழத்துக் கலையுலகம் வளரும்: வாழும். அதுபோன்றே அமரரான மாபெரும் கலைஞர் செல்லையா அவர்களின் நாமமும் வாழ்ந்து கொண்டேயிருக்கும். அவர் கலைஞர்களுள் அழியாச்சித்திரம்.

எஸ். அகஸ்திய

## ஆட்சேபம்

[கரவெட்டி]

பின்தங்கிய பிரதேசமாக விளங்கும் வடமராட்சி கிழக்குப் பகுதியில் கத்தோலிக்க மாணவர்கள் பெருமளவில் கல்வி பயிலும் கட்டைக்காடு றோ. க. வித்தியாலயம், வெற்றிலைக்கேணி றோ. க. வித்தியாலயம், செம்பியன்பற்று றோ. க. வித்தியாலயம், குடத்தனை கரையூர் றோ. க. வித்தியாலயம் ஆகிய ஆரம்பப் பாடசாலைகளை அடுத்த ஆண்டு முதல் தரம் குறைப்பதற்கு கல்வி அமைச்சு மேற்கொண்ட முடிவுக்கு யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் ஆட்சேபமும் கவலையும் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சருக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

# இன்னல்கள் எதுவந்தாலும் பின்வாங்கமாட்டேன்!"

## கம்யூ (இடது) கூட்டத்தில் சிறிமா சூளுரை

### பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்

[யாழ்ப்பாணம்]

"இன்றைய அரசு எனது கட்சிக்கும் எனக்கும் எதிராகப் பல இன்னல்களை விளைவித்துள்ளது. இன்னும் எவ்வளவுதான் இன்னல்களை விளைவித்தாலும் நானோ எனது கட்சியோ எந்த வகையிலும் பின்வாங்கப் போவதில்லை. எதிரணிக் கட்சிகளின் ஒன்றுபட்ட ஐக்கியத்துடன் இன்றைய அரசின் மக்கள் விரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகளை எதிர்த்தே தீருவோம்."

மேற்கண்டவாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) சங்கானையில் நடத்திய சர்வசன வாக்கெடுப்புக்கு எதிரான கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கூறினர்.

இடது கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய அமைப்புக் கமிட்டி செயலாளர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் திருமதி பண்டாரநாயக்கா தொடர்ந்தும் பேசுகையில் கூறியதாவது "முழுமையான வரவு செலவுத் திட்டத்தை அரசு முன்வைத்திருந்தால் மக்களின் வயிற்றில் மேலும் அடிக்கக் கூடிய நடவடிக்கைகளையே எடுக்க வேண்டி வந்திருக்கும். அதை தற்காலிகமாகத் தவிர்த்து பொதுசன வாக்கெடுப்பை நடத்துவதற்காகவே இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை முன் வைத்து மக்களை ஏமாற்றியுள்ளது. இதை நன்கு உணர்ந்து மக்கள் அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிராக வாக்களிக்கவேண்டும்.

"கடந்த ஜனாதிபதித் தேர்தலில் யாழ் மாவட்ட மக்கள் அளித்த வாக்குகளுக்கு நான் மிகவும் நன்றி கூறுகின்றேன். சங்கானைப் பகுதி மக்கள் நீண்ட காலமாக முற்போக்கு விடயங்களிலும், செயல்களிலும் முன்னணி வகிப்பவர்கள் என்பதை நான் அறிவேன். அதேபோல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி [இடது] கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சி வேட்பாளரை ஆதரித்து நின்றமைக்காக அக்கட்சிக்கும் நான் நன்றி கூறுகின்றேன். எதிர்வரும் சர்வசன வாக்கெடுப்பில் சகல மக்களும் ஐக்கியப்பட்டு பானை சின்னத்திற்கு வாக்களித்து உரிய காலத்தில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்க நீங்கள் முன்வருவீர்கள்"

திரு. கே. ஏ. சுப்பிரமணியம் தனது தலைமை உரையில், பல இன்னல்களுக்கும் மத்தியில் திருமதி. பண்டாரநாயக்கா மக்களின் அபிலாஷைகளுக்காகப் போராடும் இயக்கத்திற்கு தலைமை கொடுத்து வருவதையிட்டு எமது கட்சி அவரை வரவேற்கின்றது. அதேவேளை அவரது தலைமையில் எதிரணிக்கட்சிகள் மேலும் ஐக்கியப்பட்டு அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக விட்டு கொடுக்காது போராடு இயக்கத்தில் எமது கட்சியும் இணைந்து கொள்கின்றது" என்றும் கூறினர்.

திருவாளர்கள் கே. செந்திவேல், அனில் முனசிங்கா, கு விஜேதன், சோ. தேவராஜா ஆகியோரும் உரை ஆற்றினர். கூட்டத்தில் முன்னர் என்றுமே இல்லாத வகையில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். பெண்கள் அதிகமாக காரணப்பட்டனர்.

## நூல்கள் அன்பளிப்பு

[சித்தன்கேணி]

சித்தன்கேணி கலைநகர் நேருஜி சனசமூக நிலையத்திற்கு ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களை ... நகரைச் சேர்ந்த டாக்டர் முருகு - நல்லசேகரம் பிள்ளை அன்பளிப்பு செய்துள்ளார்.

ஆட்சியொப்பம் கொடுத்த காணியில்

# அத்துமீறி குடியேறியவருக்கு மூன்று மாதகடூழிய சிறை?

## நீதிமன்றத்தை அவமதித்தாராம்

(யாழ்ப்பாணம்)

காணி வழக்கொன்றில், ஆட்சியொப்பம் கொடுத்த பின்னர் அக்காணிக்குள் அத்துமீறிக் குடியேறி; நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரால், அவ்வழக்கின் எதிர்மனுதாருக்கு 3 மாத கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். டீ. யேசுரத்தினம் முன்னிலையில் நடைபெற்றது.

கோப்பாயிலுள்ள தமது காணி ஒன்றில ஏ. சுப்பிரமணியம் என்பவர் குடியேறியுள்ளதாக எம். எஸ். ராசலிங்கம் என்பவர் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

77 அக்டோபர் 4 ல் தாக்கலான இம்மனு விசாரணை நடைபெற்று 78 பெப்ரவரி 29ம் திகதி மனுதாருக்கு ஆட்சி ஒப்பாணை மீது பாரம் கொடுக்கப்பட்டது.

இதன்பின் 78 மார்ச் 23ல் எதிர்மனுதாரும் மற்றும் இரு உறவினரும், அக்காணிக்குள் குடிபுகுந்துள்ளதாக, மனுதாரால் கோட்டில் தெரிவிக்கப்பட்டு இது தொடர்பாக விசாரணை நடைபெற்றது.

மனுதாருக்கு காணி பாரம் கொடுத்தது தமக்குத் தெரியாதென்று எதிர்மனுதார் கோட்டில் விசாரணையின் போது தெரிவித்தார்.

நீதிபதி விசாரணை முடிவில் தீர்ப்பளிக்கையில் எதிர் மனுதார் பாரதூரமான குற்றம் புரிந்துசட்டதை துர்பிரயோகம் செய்துள்ளார் என்று, இச் சம்பவத்திற்கு எதிர்மனுதாரர் தான் முழுக் காரணகர்த்தா வெனும் தெரிவித்து எதிர்மனுதாருக்கு 3 மாத கடூழிய சிறை தண்டனை விதித்தார். 2ம், 3ம் எதிர்மனுதாரர்கள் 1ம் எதிர் மனுதாரின் கையாட்களாக இருந்ததால், அவர்களுக்கு, தண்டனை விதிக்க விரும்பவில்லை, என்றும் நீதிபதி தெரிவித்தார்.

இத்தீர்ப்பை தெரிவித்து அப்பீல் செய்வதானல் 2000 ரூபா பிணையில் செல்ல அனுமதிப்பதாகவும் நீதிபதி தெரிவித்து பிஸ்கால் உத்தியோகத்தர், உடனடியாக மனுதாருக்கு காணியின் ஆட்சி ஒப்பத்தை பாரம் கொடுக்குமாறும் கட்டளையிட்டார். (க)

சர்வஜன வாக்கெடுப்பு

# தமிழர் சுயாட்சிக் கழகம் விடுத்துள்ள அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"சிங்கள நாட்டில் ஒரு சர்வாதிகாரியும் அவரின் வேட்டைக்காடாக தமிழ் இலங்கையும் அமையக்கூடாது என நாம் கருதுவதால் தமிழ் மக்கள் அனைவரும் சர்வஜனவாக்கெடுப்பில் தவறாது கலந்து கொண்டு பாராளுமன்ற ஆயுளை நீடிப்பதற்கு எதிராக தமது வாக்குக்களைப் பிரயோகிக்க வேண்டும்".

இவ்வாறு தமிழர் சுயாட்சிக் கழகம் சர்வஜன வாக்கெடுப்பு பற்றி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சுயாட்சிக் கழகத்தின் பொதுச்செயலாளரும் சட்டத்தரணியுமான செ. கோடீசுவரனல் விடுக்கப்பட்ட இந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனநாயகம் தமிழ்மக்களுக்கு எதுவும் தந்து விடவில்லை என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனல் சர்வாதிகாரம் எமது நிலைமையை மேலும் மோசமாக்கி விடும்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் உட்பட சகல கட்சியினரும் தமக்குள்ள அதிகாரத்தை தனி மனிதர் ஒருவருக்கு மாற்றி விட்டு பாராளுமன்ற ஜனநாயகம் என்ற போர்வையில சர்வாதிகாரம் நடைபெறுவதை விரும்பமாட்டார்கள் என்றே தமிழர் சுயாட்சிக் கழகம் கருதுகிறது.

தம்முடன் ஒத்துழைக்கக் கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களை தாமே தெரிவு செய்யவும் எதிர்கட்சிகளின் உறுப்பினர்களது எண்ணிக்கை அதிகரிக்காமல் இருக்கவுமே பாராளுமன்றத் தேர்தலை நடத்தாது ஒத்திப்போடுவதற்கு சர்வஜனவாக்கெடுப்பு நடாத்துவதாக ஜனதிபதி தெரிவித்திருக்கின்றார்.

அவ்வப்போது விடுக்கப்படும் அரச கட்டளைகள் மூலம் ஆட்சி நடத்தலுல் தம்மைச் சர்வாதிகாரியென வெளி உலகம் எடை போடும் என்பதற்காக அதைமறைக்கும் வகையில் தமக்கு இசைந்த அமைப்பொன்றை பாராளுமன்றம் என்றபெயரில் வைத்துக் கொண்டு சர்வாதிகாரம் நடத்துவதற்கு ஜனதிபதி முயற்சிக்கின்றார். இதை எந்தக் கட்சிஞம் விரும்பமாட்டார்கள் என்றே தமிழர் சுயாட்சிக் கழகம் கருதுகிறது. (வண். நிரு)

## வடயேமனில்'.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

இந்நோய் பரவாது தடுப்பதற்கும், வேறு சிலநோய்களில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கும் சர்வதேச உதவிகளை வடயேமன் பிரதமர் எதிர் பார்த்து வருகின்றார்.

வட யேமனில் பூமி அதிர்ச்சிக்குள்ளான பகுதிகளில் நிவாரணப் பணிகள் வேகமாக நடைபெற்றுவருகின்றன.

இதுவரை 2800 பேர் மாண்டுள்ளனர் என்றும், 7 லட்சம் பேர் வீடுகளை இழந்துள்ளனரென்றும் தெரிவிக்கப்பட்டது. 300 கிராமங்கள் முற்றாக அழிந்துள்ளன


சேதங்கள் பற்றிய மதிப்பீடுகளை முழுமையாக மேற்கொண்டு விபரங்களைத் தெரிவிக்க இருமாத காலம் எடுக்கலாமென்றும் தெரிவிக்கப்பட்டது. (௬)

## கடமைலீவு இல்லை


[சித்தன்கேணி]

கிராமோதய சபைகளில் அங்கம் வகிக்கும் தன்னிச்சையான நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு கிராமோதய சபை கூட்டங்களுக்கு கலந்து கொள்வதற்கு கடமைலீவு வழங்கப் வழங்கப்படமாட்டாது.

இது தொடர்பாக உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாண அமைச்சின் பதில் செயலகம், சகல தாபனப் பணிப்பாளர், உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், சகல பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், சகலஉதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோருக்கு சுற்று நிருபம் ஒன்று அனுப்பி வைத்துள்ளது.

உங்கள் உணவிற்குள் சிறிதளவு அஜி-நொ-மோட்டோ தூவுங்கள்!





நீங்கள் சமைப்பது இறைச்சிக் கறியாக இருக்கலாம், மரக்கறியாக இருக்கலாம் அல்லது சாதாரண தேங்காய்ச் சம்பலாகவும் இருக்கலாம். சோறு, பொரியல், அவியல், கஞ்சி அல்லது எதுவாகவும் இருக்கலாம். உங்கள் சமையல் எதுவாக இருந்தாலும் சிறிதளவு அஜி நொ மோட்டோவைத் தூவி உணவின் இயற்கைச் சுவையைப் பெருக்குங்கள். கரும்பு, பீட்றூட், மரவள்ளி முதலியவற்றின் இயற்கை மாப்பொருளில் இருந்து எடுக்கப்படும் அஜி நொ மோட்டோவை உலகெங்கிலும் 80 நாடுகளில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாவிக்கிறார்கள்.

சந்தைப்படுத்துவோர்:
கேவ்ஸ் சந்தைப்படுத்தும் பிரிவு
விலை: ரூ. 1/10 லிருந்து

味の素 அஜி-நொ-மோட்டோ

உங்கள் உணவின் சுவையை அதிகரிக்கிறது.

Grant K & E 4692

## பொங்கல் விழா

(சித்தன்கேணி)

யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தைமாதம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பொங்கல் விழாவை கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்துவருகின்றது.

விழாவையொட்டி கட்டுரை, கவிதை, பேச்சு, நாட்டுப் பாடல், சிறுகதை, நாடகம் ஆகிய போட்டிகள் நடாத்தப் படவுள்ளன.


ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சரோஜாதேவி
பாகப்பிரிவினை

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி.ஞாயிறு2-30
கார்த்திக் — ராதா
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)

6-வது ஜனத்திரள்வாரம்
றீகல் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
அசோகன்-நாகேஷ்
நான் (ஈஸ்ட்மன் கலர்)

ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)


## இறம்பைக்குள தோட்டத்தில்

# கழுத்து வெட்டப்பட்ட நிலையில் ஆணின் அழுகிய சடலம்!

[வவனியா]

கழுத்து வெட்டபட்டுப் கொலைசெய்யப்பட்டு அழுகிய நிலையிலுள்ள ஆணின் சடலம் ஒன்றை வவனியா பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்

இறம்பைக்குளம் பெரிய தோட்டத்திற்கருகாமையில் உள்ள வயல்வெளியில் பூவரச மரத்திற்குகீழ் இந்த சடலம் காணப்பட்டது

சடலம் அழுகிய நிலையில் காணப்படுவதால் இனங்காணுவது கஷ்டமாக இருப்பதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

பச்சைநிற சாரம் உடுத்த நிலையில், குப்புறமாகவே சடலம் கிடப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன அத்துடன் கழுத்திலும், தோளிலும் வெட்டுக்காயங்கள் காணப்படுவதால் இவர் கொலைசெய்யப்பட்ட பின்னர் அவ்விடம் கொண்டுவந்து சடலம் போடப்பட்டிருக்கலாம் என்று பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

வேலி அடைப்பதற்காக சிறு பற்றைகளை துப்பரவு செய்த பக்கத்து தோட்ட விவசாயி குறித்த சடலத்தைக்கண்டு வவனியா பொலிசாருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

மரணவிசாரணை நடத்துவதற்கு வவனியா திடீர்மரண விசாரணை அதிகாரி டாக்டர் எஸ். கே. பாலசிங்கம் ஸ்தலத்துக்கு சென்று சடலத்தைப் பார்வையிட்டு வெட்டுக்காயங்கள் சடலத்திலிருப்பதினைக் கண்டு பிரேதபரிசோதனைக்கு ஏற்பாடு செய்யும்படியும், சடலத்தை ஆஸ்பத்திரி பிரேத அறையில் பாதுகாப்பாக வைக்கும்படியும் பொலிசாருக்கு உத்தரவிட்டு மேல்விசாரணையை நீதிபதி ஒருவரின்முன் நடத்தும்படியும் பொலிசாரை பணித்துள்ளார். வவனியா பொலிசார் விசாரணைகளை இன்ஸ்பெக்டர் திரு. வி. கிருஷ்ணராஜா தலைமையில் நடத்திவருகின்றனர்.

## ★ போக்லண்ட் யுத்தம்

# பிரி. வீரர்களின்புதைகுழிகளை உறவினர் தரிசிப்பர்!

லண்டன் டிச 21

போக்லண்ட் தீவில் ஆர்ஜன்டீனப் படைகளை எதிர்த்துப் போராடி உயிர்துறந்த, பிரிட்டிஷ் வீரர்களின் புதைகுழிகளை பார்வையிட அவர்களின் உறவினர்கள் பிரிட்டன் அரசின் செலவில் இலவசமாகப் போக்லண்டுக்கு அனுப்பி வைக்கப் படுவார்கள்.

எதிர்வரும் யூன் மாதம் போக்லண்ட் யுத்தம் நடைபெற்ற ஓராண்டுநிறைவுபெறுகின்றது அம்மாதத்திலேயே இந்த இலவச பயணச் சலுகையும் வழங்கப்படுமென்று பாதுகாப்பமைச்சர் திரு. ஜோன் நொட் தெரிவித்தார்.

போக்லண்ட் யுத்தத்தில் 225 பிரிட்டிஷ் துருப்புக்கள் உயிர்துறந்தனர். இவர்களில் 17–பேர்களின் சடலங்களே போக்லண்ட் தீவில் அடக்கஞ் செய்யப்பட்டன. 64 பேரின் சடலங்கள் கடந்தமாதம் பிரிட்டனுக்கு கொண்டு வரப்பட்டு அடக்கஞ் செய்யப்பட்டன.

வேறு சிலரதுசடலங்கள் கடலில் வீசப்பட்டும், கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டபோது அவற்றுடனேயே மூழ்கியும் போயின.

போக்லண்டில் எதிர்வரும் ஜூன் மாதப் பகுதியில் சுமார் 500 பிரிட்டிஷ் மக்கள் தமது உறவினர்களான மரணித்த வீரர்களின் புதைகுழிகளைத் தரிசிப்பர் இவர்கள் இங்கிலாந்திலிருந்தும் விமானம் மூலம் உருகுவே சென்று அங்கிருந்தும் விசேட உல்லாசக் கப்பலில் போர்ட் ஸ்ரான்லி செல்வார்கள். (கி)

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 7ம் திகதி

புதன்கிழமை

[22—12—82]

மேடம்: ஆசையின் பிடியில் அலைமோதும், நெஞ்சம் வேண்டாத நடவடிக்கைகள் உங்களை விபரீதத்தில் மாட்டி வைக்கும். நிதானம் நன்று.

இடபம்: மதிப்பு உயரும். இல்லத்தில் இனிமை தவழும். அறிஞர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். எவ்வித சிக்கலான பிரச்னையையும் பேச்சு வன்மையினால் சமாளித்து விடுவீர்கள்,

மிதுனம்: புதிய எண்ணங்கள் தலைதூக்கும். சுற்றுடலில் மதிப்புயர்வதற்கு இடமுண்டு. கழுகுப் பார்வை செலுத்தியவர்கள் கைகொடுத்து உதவுவார்கள். அவசரச் செய்தி ஒன்று சிந்தனையில் தோன்றும்.

கடகம்: மோத வரும் பகை மோசடிகள் நடக்கும், சகோதர வழியால் சஞ்சலம் ஏற்படலாம், அதிக சிந்தனைக்கு இடங் கொடாது துணிவே துணையென இருக்கவும்.

சிங்கம்: கொள்கை வழி வாழ்க்கையை வளம் படுத்துவதில் மகிழ்ச்சியடைவீர்கள், சிலர் வாழ்க்கையில் பொது ஜனத் தலைமைக்கும் இடமுண்டு. நீண்டநாள் எதிர் பார்த்த செய்தி ஒன்று கிடைக்கலாம்.

கன்னி: சிறுவிடயங்கள் கூட அதிகஆத்திரத்தைக் கரலாம். வீணான சந்தேகங்களும்தோன்றக்கூடும். உங்களைச்சிக்கவைப்பதற்காக சூழ்ச்சிவலை விரிக்கப் படும்.

துலாம்: அறவழிகளை மனம் நாடும். வேதனை கொடுத்த சம்பவம் ஒன்று சமரசமாகத் தீர்க்கப்படலாம. சுற்று வட்டாரத்தில் மதிப்பு உயரும். பயன்தரும் பிரயாணம் ஒன்றும் ஏற்படலாம்.

விருச்சிகம்: திருப்திகரமான மாற்றங்களுக்கு இடமுண்டு. நுட்பமான தொழில் புரிபவர்கள் பாராட்டப்படுவார்கள். திறமையான நடவடிக்கைகளின் மூலம் பண லாபத்தைத் தேடிக் கொள்வீர்கள்.

தனு: நடுநிலை தவறாது நல்லனதச் செய்வீர்கள் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியைக் கொடுக்கும். பழைய நண்பர்களின் சந்திப்பும் உண்டு, அதிர்ஷ்டசம்பவங்கள் நிகழும.

மகரம்: வாழ்க்கை ஒருசுமையாகத் தோன்றும். கடன் தொல்லைகள் அதிகரிக்கும். சிந்தனையை ஒரு வழிப்படுத்தி செயலாற்றவும பிறர் நம்பிக்கை கூடாவாம்.

கும்பம்: எக் கருமத்தையும் எண்ணித்துணிக அவசரப் போக்கினால் அருமையான சந்தர்ப்பத்தை கோட்டை விடக் கூடும். வணிகர்களாயின் அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும்!

மீனம்: வணிகத் துறையில் வாய்ப்புக்கள் கிடைக்கும். சொத்து விவகாரத்தில் நல்ல முடிவு ஏற்படும். புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். ஆதரவுக்கும் இடமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
மல்லாகம்

மரணசாதனமின்றிக் காலஞ்சென்ற இளவாலை செல்லப்பா குமாரசுவாமி பெண் பிரத்தினம்மா வெனமறுநாமமுங்கொண்ட அன்னம்மா விட்டுச் சென்ற சொத்துக்கள் சம்பந்தமாக.

–மரணமெய்தியவர்

வேலுப்பிள்ளை செல்லத்துரை, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக் கட்டுவன்.

–மனுதார்

மரணசாதன )
நியாயாதிக்கம்) 145/T

எதிராக

1. செல்லப்பா குமாரசுவாமி, பத்தாவத்தை இளவாலை மேற்கு, இளவாலை.
2. வேலுப்பிள்ளை தம்பு, புன்னாலைக் கட்டுவன் தெற்கு, புன்னாலைக் கட்டுவன். தற்சமயம் இல. 11, ஐம்பத்தைந்தாம் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-6

–பிரதிவாதிகள்

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களையும், உடமைப் பொருட்களையும் நிர்வகிப்பதற்கு, மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் மனுதார் நிர்வாகப்பத்திரம் தனக்கு வழங்குமாறு இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கைத் தொடுத்தமையினால் இந்நீதிமன்றம் அவரின்கோரிக்கைக்கு இணங்கிப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுளளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமாக அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு மாசி மாதம் 2ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி இவ்வழக்கிற்பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றுமுடிவாக்கப்படலாகாது எனபதற்குத் தக்க காரணமிருப்பின் அதனை இந் நீதிமன்றத்திற்குக் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

1982ம் ஆண்டு மார்கழி மாதம் 16ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,

சு. வ. கணேசன்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்.

தயாரித்தவர்:
வ. முத்துக்குமாரசுவாமி,
மனுதாரின் சட்டத்தரணி.

5546


வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
சவாலேசமாளி

ராணி தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ். நகர்) சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
(யாழ். நகர்)
BRUCE LEE in
THE WAY OF THE DRAGON
த வே ஒவ் த ட்றகன்

மனோகரா
[யாழ்நகர்] தினசரி 5 காட்சிகள்
TRUE STORY OF BILLY HAYES
IN
MIDNIGHT EXPRESS
(Serictly For Adults Color)

சாந்தி யாழ்நகர் - 22 - 24 வரை
10-30, 2 30, 4-45, 7-00, 9-30
NIGEL TERRY - HELEN MIRREN
JOHN BOOR MAN S IN
EXCALIBUR
SEX - THRILL - ADVENTURE - COLOR

வின்ஸர் தினசரி 5 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
BUD SPENCER IN
They Called Him Bull Dozer
முழுநீள ஹாஸ்யப்படம்
24-12-82 முதல் வசந்தமாளிகை

வருடமொன்றிற்கு உங்கள் பணத்திற்கு 26%வீதம் தொடக்கம் 28%வரை வட்டியும் மேலதிகமாக 2% வீதம் இலாபத்திலும் கொடுக்கப்படும். குறைந்த தொகை ரூபா 1000/- விபரங்களுக்கு:-

யாழ். பிறப்பட்டி ரேட்ஸ் லிமிட்,
3, நவீன சந்தை (மேல் மாடி),
யாழ்ப்பாணம். போன்: 23698

சினிமா ஒப்பறேட்டர் தேவை

யாழ்ப்பாணத்தில் நிரந்தர வசிப்பிடம்கொண்ட, அனுபவமிக்க சினிமா ஒப்பறேட்டர் தேவை. அத்துடன், சினிமா ஒப்பறேட்டர் வேலை பழகுவதற்கு இளைஞர்களும் தேவை. விபரங்களுக்கு காலை 9-00 மணிக்கு கல்வி, அனுபவம் சம்பந்தமான தஸ்தாவேஜுகளுடன் நேரில் வரவும்.

றீகல் சினிமா யாழ்ப்பாணம். (5578)

## 28ம் திகதி வர்த்தக விடுமுறை

[கொழும்பு]

மகமது நபி பிறந்ததின மான இம் மாதம் 28ம் திகதி ... விடுமுறை தினமாக அரசு பிரகடனம் செய்துள்ளது.

இதுவரைகாலமும் இத்தினம் அரசாங்க வங்கி விடுமுறைதினமாகவே இருந்து வந்தது.

போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம் எச். முகமது தொடர்ந்த உள்நாட்டு அமைச்சர் திரு கே. டபிள்யூ தேவநாயகத்திற்கு விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து இத்தினம் வர்த்தக விடுமுறை தினமாக்கப்பட்டுள்ளது. [க]

ராஜ்குமார் கொலை:

## சந்தேகநபர்கள் மூவருக்கும் தொடர்ந்து றிமாண்ட்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை கொலைச்சம்பவம் தொடர்பான சந்தேக நபர்கள் மூவரும் தொடர்ந்து இம்மாதம் 27ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 3ம் கட்டப்பிரிவின் பொறியியலாளரான டபிள்யூ ரி ராஜ்குமார் கத்தியால் குத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

இது தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட தொழிற்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்களான எம். ஜயந்த, ஏ. ஆர். விஜரத்ன. கந்தையா நடேசு ஆகியோர் கொலையுண்டவரின் மரணவிசாரணையை நடத்திய யாழ். நீதவான் திரு. ரி யோகநாதன் இவர்களை றிமாண்டில் வைக்குமாறும் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறும் உத்தரவிட்டிருந்தார்.

இதற்கிணங்க மேற்படி நபர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அச்சமயம் பதில் நீதிபதி திரு. ரி தம்பிரத்தினம் மூவரையும் இம்மாதம் 27ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## "சிங்கள மாணவியர் அரங்கேற்றம் இன ஒற்றுமையை வளர்க்க உதவிபுரியும்"

### லயனல் பெர்ணாண்டோ நம்பிக்கை

[கொழும்பு]

"பாரதநாடு எமக்குத் தந்த பழம்பெரும் கலைகளில் ஒன்றான பரத நாட்டியத்தை சிங்கள மாணவியர் இருவர் கற்று இங்கு அரங்கேற்றியுள்ளமை பெருமைக்கும் மகிழ்ச்சிக்கு முரிய விடயமாகும். இது போன்ற செயல் இந்நாட்டில் இன ஒற்றுமையைப் பேணுவதற்கு பேருதவி புரியும் என்பதில் ஐயமில்லை"

இவ்வாறு தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு லயனல் பெர்ணாண்டோ கொழும்பு நவரங்கலா மண்டபத்தில் நடைபெற்ற பரத நாட்டிய அரங்கேற்றம் ஒன்றின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

கொழும்பு கல கேந்திராவைச் சேர்ந்த திருமதி கமலா ஜெயதிலகாவின் மாணவிகளான சகோதரிகள் செல்விகள் பத்மாலி தஷ்பந்தி அல்மெய்டாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த ஞாயிறன்று நடைபெற்றது.

திரு. லயனல் பெர்ணாண்டோ மேலும் பேசுகையில் கூறியதாவது:

"சமய போதனைகளையும் அரசியல் சிந்தனைகளையும் எமக்களித்த பாரத நாட்டின் பழம் பெரும் கலைகளில் ஒன்றான பரதநாட்டியத்தைக் கற்றுவர்ந்து சிங்களக் குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரிகளுக்கு கற்பித்து இவ் இனிய மாலைப்பொழுதில் எம்மையெல்லாம் மகிழ்வித்த திருமதி மாலா ஜெயதிலகா மிகவும் பாராட்டுக்குரியவர்.

"முற்றிலும் வேறுபட்ட கலாசாரத்தைக் கொண்ட இவ் இரு சிங்களச் சிறுமிகளும் இங்கு ஒரு சிறந்த பரத நாட்டிய விருந்தை அளித்ததோடு, கணேசர் துதி, நடராஜர் பூஜை ஆகியவற்றில் கலந்து கொண்டதையும் பார்த்தபோது எனக்கு பெரும் பூரிப்பு ஏற்பட்டது." [இ]


## விடுமுறை அறிவித்தல்

எமது காரியாலயம் நத்தார்பண்டிகையை முன்னிட்டு இம்மாதம் 22-ம் திகதி தொடக்கம் 26-ம் திகதி வரை மூடப்பட்டிருக்கும்.

ஹோம் பிறைன்ஸ் லிமிட்.



## கேள்வி அறிவித்தல்

### வை. டபிள்யு. சி. ஏ. கட்டிடம்

யாழ்ப்பாணம், வேம்படி வீதிக்கு அருகாமையில் மேற்படி கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும், அதற்கான கட்டிடப் பொருட்களை விநியோகிப்பதற்குமான தனித்தனி கேள்விகள் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன பத்திரங்கள் 1982 டிசெம்பர் 31-ந் திகதிக்கு முன் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/- செலுத்துவதன் பேரில யாழ்ப்பாணம, வை எம். சி, ஏ. யில் பெற்றுக் கொள்ளலாம். தேவையான வரைபடங்களையும் மற்றும் ஆவணங்களையும் யாழ். வை. எம். சி. ஏ. யில் பார்வையிடலாம்.

CHAIRMAN,
BUILDING COMMITTEE,
Y. W. C. A (5567)



## மரண அறிவித்தல்

### சாமிநாதன் கணேசன்

எஸ் கணேசன் காலமானர். இவர் ரெட்ணாம்பாளின் அன்புக் கணவரும், வாசகர், சம்பந்தர், குட்டி, கமலா. பூசணி, லெட்சுமி, திரு. பாலா என்பவர்களினது தகப்பனாரும், அருணா, சண்முகரெட்ணம், சுந்தர் (அருணா கோஷ்டி) அவர்களினது மைத்துனரும், திருமதி சிவக்கொழுந்துவின் மருமகனும், ரங்கன் (இசைக்குழு) ஜெயசிங்கம், கணேசசுந்தரம் (வில்லுப்பாட்டு) இவர்களினது சகலனுமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லூர் முத்திரைச்சந்தியில் இருக்கும் அன்னாரின் இல்லத்திலிருந்து இன்று புதன்கிழமை காலை பத்துமணியளவில் தகன கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 5586


## சேமமடு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எதிரிசார்பில் சட்டத்தரணி கனகமனோகரனும், அரசதரப்பில், அரசசட்டத்தரணி கே. வி. எஸ் ஸ்ரீஸ்கந்தகுமாரும் ஆஜரானர்கள்.

விசாரணை முடிவில் ஜூரி சபையினர் ஏகமனதாக, எதிரி நிரபராதி எனத்தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிபதி எதிரியை விடுதலை செய்தார். [க]

## இன்று ஜெயந்திவிழா

(யாழ்ப்பாணம்)

குருதேவா சுவாமி சிவானந்தரின் பிரதமசீடரும் இலங்கை திவ்யஜீவன சங்கத்தின் சச்சிதானந்த சிறுவர் சங்கங்களின் போஷகருமாகிய யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிஜியின் 64வது ஜெயந்தி விழா யாழ் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் இன்று மாலை நடைபெறவிருக்கிறது.

திரு. எஸ், கனகரத்தினம் தலைமையில் சிவானந்த மாதர் சங்கத்தின் ஆதரவுடன் சச்சிதானந்த சிறுவர்களால் இவ் விழாவில் பஜனை திருவடிபூசையுடன் செல்விகள் வசந்தகுமாரி, செ. சாந்தலோஜனாவின் "பஜனை அவசியமா?" என்ற கருத்தரங்கும் நடைபெறும். (க)

## சென்னை சோதிடமாநாடு: இலங்கையருக்கு அழைப்பு

சென்னை, டிச. 21

சென்னையில் இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கும சர்வதேச சோதிடமகா நாட்டில் கலந்து கொண்டு சிறப்புரை வழங்குமாறு இலங்கையைச்சேர்ந்த 'சோதிட சிந்தாமணி' சு. விவேகானந்தன் அழைக்கப்பட்டுள்ளார்.

சென்னையிலுள்ள பிரபல சோதிடக்கலை சம்பந்தமான நிறுவனம், சோதிடக்கலை, தெய்வீகத்தன்மை வாய்ந்ததாகவும், விஞ்ஞான ரீதியாகவும் உள்ளது என்பதை உலகுக்கு வலியுறுத்தும் பெரும் பணியை மேற்கொண்டுவருகிறது. இதன் ஒரு அம்சமாகவே சென்னை மகாநாடு நடைபெறுகிறது.

உலகின் பல பகுதிகளிலிருந்தும் அநேகமான சோதிடர்கள் கலந்துகொள்ளும் இம்மகாநாட்டை தமிழக ஆளுநர் திரு. குரானா தொடக்கிவைக்கின்றார். பெங்களூர் சோதிட மேதை பி வி. இராமன் தலைமைவகிப்பார். இம்மகாநாட்டில் கலந்துகொள்ளும் திரு விவேகானந்தனுக்கு "சோதிடக்கலைஜோதி" எனும் பட்டம் 1976ல் நடைபெற்ற இதே மகாநாட்டில் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## குடும்பச்சுமை தாங்காது தற்கொலை

[கிளிநொச்சி]

குடும்பச்சுமை காரணமாக ஐந்து பிள்ளைகளின் தந்தை வாழ்வில் விரக்தி அடைந்து கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

மாங்குளம் தணுக்காய் வீதி புத்தறுப்புக்குளம் பகுதியில் வசித்துவந்த கார்த்திகேசு பத்மநாதன் (27 வயது) என்பவரே மரணமானவராவார். மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி திரு மு. யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை மாங்குளம் பொலிசார் ஆஜர்செய்தனர்.

மரணமானவரின் மனைவி பரிமளாதேவி சாட்சியமளிக்கையில் "மரணமானவரை 13 வருடங்களுக்கு முன்னர் திருமணம் செய்து மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்திஞேம் கடந்த சில வருடங்களாக வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டதால் கணவர் மனமுடைந்து காணப்பட்டார் அதனல் மதுவிற்கு அடிமையாகி மதுவே தஞ்சம் என்றுவாழ்ந்தார் சம்பவதினம் அவரது சகோதரர் சுந்தரலிங்கத்துடன் வீடு வந்துதிடீரென கிருமிநாசினியை அருந்திமரணமானர் என்ருர்" மரணவிசாரணை அதிகாரி திரு யோகலிங்கம் தற்கொலை எனத்தீர்ப்பு வழங்கினர்.


# I. D. P. M. (LOND.) EXAM-ALL PARTS

## COMPUTER PROGRAMMING COURSE

In Association with Computerlink Data Systems Ltd. And Systime Ltd , London.

We have the world's most popular Computers such as APPLE II and the Largest Multiuser Multiprogramming SYSTIME S 500 COMPUTER for Practical training

Widely used programming Languages Our Main Computer SYSTIME is equiped with variety of Computers such as BASIC, COBOL, FORTAN PASCAL AND RPG II.

- ஒவ்வொரு மாணவருக்கும் COMMODORE, SINCLAIR கொம்பியூட்டர்கள் வீட்டிற்கு எடுத்துச் சென்று பயிற்சி பெறுவதற்கு இலவசமாக வழங்கப்படும்.
- யாழ்நகரில் எங்களிடம் மட்டுமே ஒரேநேரத்தில் பல மாணவர்களால் உபயோகப்படுத்தக்கூடிய மிகப் பெரிய கொம்பியூட்டர் உள்ளது என்பதைப் பெருமையுடன் உங்களுக்கு அறியத்தருகிறோம்.

9-1-1983க்கு முன் விண்ணப்பிக்கவும்

மேலும் விபரங்கட்கு :

**Auto Cool Computers (PVT) Ltd.**
(சாந்தி தியேட்டர் அருகாமை)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 23770

ராஜ் எம்போரியம்
பசார் வீதி,
வவுனியா.
தொலைபேசி : 2340


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ... 1982-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q B. 100236/81 Eelanaadu - P. O. Box 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.